

# மூன்றாம் இழுப்பு

3

சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்திகளிலிருந்து

# மூன்றாம் இழுப்பு

சகோதரி பிரான்ஹாம்
சுகம் பெறுதல்





சகோதரி. ஹாட்டி
ரைட்டின் மகன்கள்
இரட்சிக்கப்படுதல்


அணில்கள்
சிருஷ்டிக்கப்படுதல்





அந்தப் புயல் காற்றுக்குக்
கட்டளையிடு. அது
மறைந்துவிடும்

சிறிய மீன்
உயிரடைதல்



# சகோதரி பிரான்ஹாம் சுகம் பெறுதல்



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

24. அது நான்காம் முறை நிகழ்ந்தது. உங்களிடம் ஒன்றைக்கூற விரும்புகிறேன். நான் உண்மையை அப்படியே கூறவேண்டும். ஏறக்குறைய பதினாறு ஆண்டுகளுக்கு முன்பு, நான் சகோ. ஜான் ஷரிட் என்பவருடன் கலிபோர்னியாவில் இருந்தேன். நான் அங்கு ஒரு கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டியிருந்தது. நானும் மேடாவும், சகோதரன், சகோதரி ஷாரிட்டும் ஒரு ஓட்டலில் தங்கியிருந்தோம். அப்பொழுது பால் மாலிக்கி என்னும் பெயர் கொண்ட ஒருவர் - அவர் அநேகமுறை இந்த கூடாரத்திற்கு வந்திருக்கிறார். அவர் மிகுந்த செல்வம் படைத்த ஆர்மீனியர். அவருடைய மனைவிக்கு கலிபோர்னியாலிலுள்ள ஃபிரெஸ்னோவில் குழந்தை பிறந்தது. அவர்கள் இங்கு வசித்து வந்தனர்... அவர் மனைவியைக் கூட்டிக் கொண்டு என்னைக்காண ஒட்டலுக்கு வந்திருந்தார், அவர், "சகோ. பிரான்ஹாமே, நான் மனைவியை மேலே கொண்டு வரலாமா?" என்று கேட்டார். நான், "சரி, கொண்டு வாருங்கள்" என்றேன் (அடுத்த நாள் நான் காடலினாவுக்குச் செல்ல விருந்தேன்),

எனவே அவர் மனைவியை மேலே அழைத்து வந்தார். அவள் வியாதியாயிருந்தாள்.

அவள்..... நான், “சகோதரி மாலிக்கி, உன் கையை: என் கையின் மேல் போடு. கர்த்தர் நம்மிடம் உரைக்கிறாரா என்று பார்க்கலாம்” என்றேன். அவள் தன் கையை என் கையின் மேல் போட்டவுடனே, நான், “ஓ, அது பால் கால் (Milk leg)” என்றேன் (பால் கால் என்பது பிரசவம் கழிந்தவுடன் கால்களில் உண்டாகும் வீக்கம் - தமிழாக்கியோன்).

25. அவள், “அற்கான அறிகுறிகள் எதுவும் எனக்கு இருப்பதாக தெரியவில்லையே” என்றாள்.

நான், “நீ கவனித்து வா” என்றேன். இரண்டு நாட்களுக்குள், மருத்துவர்கள் அவளுக்கு பால் காலுக்காக கிசிச்சை செய்தனர்.

இங்குள்ள ஜிம்மி பூலின் சிறு குழந்தையைப் போன்று. அன்றொரு நாள் அவர்கள் மாரடைப்பு என்று நினைத்துக கொண்டு என்னிடம் வந்தார்கள். அது ஆஸ்துமா இழுப்பாக இருந்தது. என் கையை அவன் மேல் போட்டு, “அவனை இரண்டுநாட்களுக்கு கவனித்து வாருங்கள். அவனுக்கு விளையாட்டு அம்மை (measles) உள்ளது, அது எழும்பி வரப்போகின்றது. அதற்கான ஜுரம் அவனுக்கு இப்பொழுது உள்ளது” என்றேன். நான் சென்ற இரவு ஜிம்மி

பூலைச் சந்தித்தேன். அவர், “அவன் உடல் பூராவும் விலையாட்டு அம்மை தோன்றியுள்ளது” என்றார்.

நான் சகோதரி மாலிக்கியிடம் அவளுடைய கையைக் குறித்து பேசிக்கொண்டிருந்தேன், அவள், “சகோ. பிரான்ஹாமே அது மிகவும் அதிசயமான காரியம். அது எல்லா கைகளிலும் கிரியை செய்யுமா?” என்று கேட்டாள்.

நான், “அவர்களுக்கு வியாதி இருக்குமானால்” என்றேன். நான், “இங்கே என் கையை ... போடுகிறேன். (அநேகர் அதை கவனித்தீர்கள்). ஒன்றும் நேரிடாது” என்று கூறி விட்டு, “பாருங்கள், என் மனைவிக்கு எந்த வியாதியும் இல்லை ... உன் கையை என் மேல் போட்டுக் கொள்கிறேன், பாருங்கள்” என்றேன் (என் மனைவி அங்கு உட்கார்ந்து கொண்டிருந்தாள்). அவள் தன் கையை என் கை மேல் போட்டாள். அவள் போட்டவுடன், நான், “உன் இடது கருப்பையில் ஒரு வீக்கம் (Cyst) எழும்பியுள்ளது. உனக்கு பெண்களுக்கு ஏற்படும் கோளாறு உள்ளது” என்றேன்.

அவள், “அப்படி ஒன்றும் எனக்குத் தோன்றவில்லையே” என்றாள்.

நான், “ஆனால் உனக்கு இருக்கிறது” என்றேன். என் மகள் பெக்கிக்கு இப்பொழுது இரண்டு வயது - சற்று முன்பு பியானோ இசைத்தவள். அதற்கு இரண்டு வருடங்கள் கழித்து சாராள் பிறந்தாள். அவள் அறுவையின் மூலம் பிறந்தாள் (Caesarean). நான் கார்ட்டனிலுள்ள எங்கள் மருத்துவர், டாக்டர் டில்மனிடம், “அவளுடைய வயிற்றை அறுத்து திறக்கும் போது, அவளுடைய இடது கருப்பையை கவனியுங்கள்” என்றேன். அவர் பார்த்து விட்டு, “நான் ஒன்றையும் காணவில்லையே” என்றார். என் கையை அவள் கை மேல் போட்டு பார்த்தேன். அது அப்பொழுதும் அங்கிருந்தது.

நான்கு ஆண்டுகள் கழித்து ஜோசப் பிறந்தான். நான் மறுபடியும் மருத்துவரிடம் பார்க்கக் கூறினேன். அவர், “நான் ஒன்றும் காணவில்லையே” என்றார். என் கையைப் போட்டேன் -- அது அப்பொழுதும் அங்கிருந்தது. நாங்கள் அதைக் குறித்து மறந்தே போய் விட்டோம்.

26. நான் இதை கூறியே ஆகவேண்டும். இதை கூற எனக்கு விருப்பமில்லை. ஆனால் உண்மையை சொல்ல வேண்டும், பாருங்கள்,

அதுதான் உங்களுக்கு அவசியம். என்ன நடந்த போதிலும் எப்பொழுதும் உண்மையையே கூறுங்கள்.

ஆண்டுகள் கழிந்தன, நாங்கள் கவனம் செலுத்தவேயில்லை. இதை நான் கூறுகிறேன் -- அவள் இங்கு இல்லாததனால் இதை கூறுகிறேன், அவள் இங்கு இருப்பதனால் அல்ல. என் மனைவியைக் காட்டிலும் சிறந்த மனைவி இவ்வுலகில் இருக்க முடியாது என்பது என் கருத்து. அவள் எப்பொழுதும் அதே விதமாக இருப்பாள் என்று நம்புகிறேன். நானும் அவளுக்கு விசுவாசமுள்ள கணவனாக இருக்க விரும்புகிறேன். இந்த கட்டிடத்திலுள்ள வாலிபர் ஒவ்வொருவரும் மணம் புரிந்து கொள்ளும் போது, என் மனைவியைப் போன்ற ஒரு மனைவியைப் பெற்றுக் கொள்வார்களென நம்புகிறேன். நாங்கள் எவ்வளவு காலம். அவ்வாறு வாழ்வோம்.. என்று எனக்குத் தெரியாது. நாங்கள் இவ்வுலகில் இனிமேலும் வாழப் போகும் நாட்கள் முழுவதிலும் என்று நம்புகிறேன் நாங்கள் ஒன்றாக மிக்க மகிழ்ச்சியுள்ளவர்களாயிருக்கிறோம்.

**அவளை மணந்து கொள்ள தேவன் தான் என்னிடம் கூறினார்.** அதே சமயத்தில் அவளை மணந்து கொள்ளாதிருக்க நான் முயன்று

வந்தேன் (அவளுக்கு அது தெரியாது). அவளை நான் தேசிக்காததனால் அல்ல, அவளுக்கு ஒரு நல்ல வாழ்க்கை அமைத்து கொடுக்க முடியாது என்று நான் கருதின காரணத்தினால் தான். அவள் மிகவும் அருமையானவள், நான் அதற்கு தகுதியற்றவன் என்று எண்ணினேன். அவள் ஜெபம் செய்ய புறப்பட்டுச் சென்று வேதாகமத்தை திறந்தாள் .... அவள் "இதை நான் முன்பு செய்ததில்லை, ஆனால் எனக்கு உதவி செய்ய ஒரு வேதவசனத்தை அளிப்பீராக. அவரை நான் மறக்க வேண்டுமானால், நான் மறந்து தான் ஆக வேண்டும்" என்றாள். அவள் ஒரு சிறு கொட்டகைக்கு சென்று ஜெபம் செய்து விட்டு வேதாகமத்தை திறந்த போது, "இதோ, நான் தீர்க்கதரிசியாகிய எலியாவை அனுப்புகிறேன்!" என்று மல்கியா 4ல் உரைக்கப்பட்டுள்ள வேதவசனத்தை அவள் கண்டாள், அது சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன்பு. இந்த நாளின் ஊழியத்தைக் குறித்து அப்பொழுது ஒன்றுமே தெரியாது.

**நான் அங்கு ஆற்றங்கரையில் படுத்துக் கொண்டிருந்தேன். அவர் ஒரு இரவு என்னை எழுப்பினார். அவர் வாசற்படியில் நின்று கொண்டு பேசுவதைக் கேட்டேன். அவர், "நீ**

**சென்று, அவளை மனைவியாக அடைந்து கொள். உன் விவாகம் வரும் அக்டோபர் மாதம் இருபத்து மூன்றாம் தேதி நடைபெறும்" என்றார், நான் அவர் கூறினபடியே செய்தேன்.** நாங்கள் சந்தோஷமாக வாழ்ந்து வருகிறோம். தேவனுடைய கிருபையினால் எங்களிடையே சண்டை எழுந்ததில்லை. அவள் இதயத்திற்கு இனியவளாக இருந்து வருகிறாள்.

ஒரு நாள் நான் வீட்டுக்குள் நுழைந்தேன். நான் ஊழியத்திற்கு சென்று விடுவதால், அவள் பிள்ளைகளை தனியாக வளர்த்து வருகிறாள். அநேக பெண்கள் அதை பொறுத்துக் கொள்ள மாட்டார்கள். உங்களுக்கு அது தெரியும்..... அது மிகவும் கடினம்..... நான் உள்ளே நுழைந்த போது, அவள் ஏதோ ஒன்றை கூறிவிட்டாள். எங்களுக்கு ஜோசப் இருந்தான். அவன் துடுக்கான பையன்! அவனுடைய தாயின் தலையிலும், என் தலையிலும் சில நரைமயிர் தோன்ற அவன் காரணமாயிருந்தான். அவன் உண்மையில் துடுக்கான பையன். அவன் மிகவும் மோசமான ஒன்றை செய்து விட்டான். நான் அவளிடம்.... அவள் என்னிடம். "பில், அவனை அடியுங்கள்" என்றாள். நான், "எனக்கு போதிய தைரியமில்லை" என்றேன்.

அவள், "உங்களுக்கு அது நேர்ந்திருந்தால் தெரிந்திருக்கும்" என்று சொல்லி விட்டு 'படார்' என்று கதவை என் முகத்தில் மூடினாள்,

அது பரவாயில்லை என்று நினைத்துக் கொண்டேன். அந்த ஏழை பையன் அதை வேண்டுமென்று செய்யவில்லை. நான் காரைக் கழுவுவதற்காக வெளியே சென்றேன், நான் வெளியே சென்ற போது, அந்த சம்பவம் பரிசுத்த ஆவியானவருக்கு பிடிக்கவில்லை. அவர் "நீ போய் அவளிடம் சொல்..." என்றார், அது 2 நாளாகமம், 22ம் அதிகாரம் என்று நினைக்கிறேன். நான் ஒருக்கால் கற்பனை செய்கின்றேனோ என்று முதலில் நினைத்தேன். நான் காரைக் கழுவிக் கொண்டிருந்தேன். அவர் மறுபடியும் என்னிடம், "அதை படிக்கும்படி அவளிடம் சொல்" என்றார். நான் உள்ளே சென்று, வேதாகமத்தை கையிலெடுத்து அதைப் படித்தேன். அந்த வேதபாகத்தில் தான் தீர்க்கதரிசினியாகிய மிரியாம், தன் சகோதரன் மோசே எத்தியோப்பிய ஸ்திரீயை விவாகம் செய்து கொண்டதால் பரியாசம் செய்ததைக் குறித்து எழுதப்பட்டுள்ளது. தேவனுக்கு அது பிடிக்கவில்லை. அவர், "அவள் அப்படி செய்ததைக் காட்டிலும் அவள் தகப்பன்

அவள் முகத்திலே காறித் துப்பியிருந்தால் நலமாயிருக்கும்" என்றார் (எண். 12:14).

27. எனவே மிரியாமுக்கு மேலெல்லாம் குஷ்டம் பிடித்தது. ஆரோன் அவனுடைய சகோதரியிடம் வந்து..... அவனுடைய சகோதரனிடம், "அவள் குஷ்ட ரோகத்தினால் மரித்துக் கொண்டிருக்கிறாள்" என்றான். மோசே அவளுக்காக பரிந்து பேசுவதற்காக பலிபீடத்தண்டை ஓடினான். அப்பொழுது அக்கினி ஸ்தம்பம் இறங்கி வந்தது - தேவன். அவர் "நீ மிரியாமையும் ஆரோனையும் இங்கு அழைத்துக் கொண்டுவா" என்றார். ஆரோனும் இதில் ஈடுபட்டிருந்தான். எனவே அவர், அவர்களை இங்கு வரும்படி அழைத்து வா என்றார்.

அவர், "உங்களுக்குள்ளே ஒருவன் (தேவன் இப்பொழுது அவர்களிடம் பேசுகின்றார்) ஆவிக்குரியவனாக அல்லது தீர்க்க தரிசியாயிருந்தால், கர்த்தராகிய நான் என்னை அவனுக்கு வெளிப்படுத்துவேன். நான் தரிசனத்தில் என்னை அவனுக்கு வெளிப்படுத்தி, சொப்பனத்தில் அவனோடே பேசுவேன், சொப்பனத்தை வெளிப்படுத்தித் தருவேன்" என்றார் (எண். 12:6), அவர், "என் தாசனாகிய மோசேயோ - அவனைப் போல் தேசத்தில் ஒருவனும் இல்லை, அவனுடைய

காதில் உதடுகளை வைத்து பேசுகிறேன். உங்களுக்கு தேவனிடத்தில் பயமில்லையா?" என்றார். பாருங்கள், தேவனுக்கு அது பிடிக்கவில்லை.

அதை நான் கண்டபோது, நான் உள்ளே ஓடிச் சென்றேன். அவள் வேறொரு அறையில் இருந்தாள். நான் கதவைத் தட்டினேன் (அவள் கதவை அடைத்திருந்தாள். நான் அவளிடம் பேச விரும்புவதாக கூறினேன். நான் உள்ளே சென்று அவளிடம் பேசி, அது என்னவென்று அவளிடம் கூற முனைந்தேன். நான், "இதயத்துக்கு இனியவளே, உன்னை நான் எவ்வளவாக நேசிக்கிறேன் என்று உனக்குத் தெரியும். ஆனால் தேவனுக்கு அது பிடிக்கவில்லை. நீ அப்படி சொல்லியிருக்கக் கூடாது" என்றேன். உடனே அவளுக்கு பக்கவாட்டில் கோளாறு ஏற்பட்டது.

நாங்கள் லூயிலில்லிலுள்ள மருத்துவரிடம் அவளைக் கொண்டு சென்றோம் (டாக்டர் ஆர்தர் ஷோன் என்பவர்). அவர் இடது கருப்பையில் ஒரு கட்டியை (tumor) கண்டுபிடித்தார் - நான் பதினைந்து, பதினாறு ஆண்டுகளுக்கு முன்பு கண்டு பிடித்த ஒன்றை இடது கருப்பையில் 'வால் நாட்' கொட்டை (Walnut) அளவுக்கு ஒரு கட்டி,

நான், "டாக்டர், அதைக் குறித்து என்ன?" என்று கேட்டேன்.

அவர், "என்ன நடக்கிறதென்று பார்க்கலாம். சில மதங்கள் கழித்து அவளை மறுபடியும் கொண்டு வாருங்கள்" என்றார் (ஏறக்குறைய இரண்டு மாதங்கள் கழித்து).

நாங்கள் அவளை மறுபடியும் கொண்டு சென்றோம். அது 'வால் நட்' கொட்டை அளவிலிருந்து எலுமிச்சம் பழம் அவுவுக்கு பெரிதாக வளர்ந்திருந்தது. அவர், "அது வெளியே வந்து விடுவது நல்லது. அது மிருதுவாகி, புற்று நோயாக மாறி விடும்" என்றார்.

நான், "அப்படியா? நாங்கள் டூசானுக்குச் செல்கிறோம், கர்த்தர் என்னை டூசானுக்கு அனுப்புகிறார்" என்றேன்.

அவர் பெண்களின் வியாதிகளுக்கான சிறப்பு மருத்துவரிடம் அவளை அனுப்பினார் (அவர் தமது கைகளில் வைத்துக் கொள்ள விரும்பவில்லை) இவர் அவரிடம் என்னுடைய ஊழியத்தைக் குறித்து கூறியிருக்க வேண்டும். ஏனெனில் அந்த சிறப்பு மருத்துவர், "அது வெளியே வந்தே ஆக வேண்டும்" என்றார். எனவே அவர் கூறினார்...... நாங்கள் டூசானுக்குச்

செல்வதாக அவரிடம் கூறினோம். அவர், "அங்கு ஒரு சிறப்பு மருத்துவர் இருக்கிறார். அவர் எனக்கு நெருங்கிய நண்பர்" என்றார். இவர் இதற்கு முன்பு டூசானில் வசித்து வந்தார். அவர், "உங்களை நான் அவரிடம் அனுப்பப்போகிறேன்" என்றார். எனவே அவர் குறிப்பு ஒன்றை எழுதி அவருக்கு அனுப்பி, "திருமதி பிரான்ஹாம் நல்லவர்கள்" என்று ஆரம்பித்து தொடர்ச்சியாக எழுதிக் கொடுத்து, அந்த கட்டியின் அளவைக் குறிக்கும் படமொன்றையும் அனுப்பினார் (அது அப்பொழுது கட்டியாக மாறியிருந்தது). அவர், "அவரை அறிவேன்..." என்று எழுதினார். அவருக்கு என்னைத் தெரியும்...... அவர் என்னை "தெய்வீக சுகமளிப்பவர்" என்று குறிப்பிட்டிருந்தார் என்று நினைக்கிறேன் (அவ்வளவு தான் அவருக்கு என்னைக் குறித்து எழுத தெரியும்). நான், "அது கட்டாயமாக வெளியே எடுக்கப்பட வேண்டுமானால், எடுத்து விடுங்கள். அதற்கு நான் சம்மதம் தெரிவிக்கிறேன்" என்றேன். அது எங்கள் விசுவாசம் சோதிக்கப்படுதலாம்

28. நாங்கள் தொடர்ந்து ஜெபித்து வந்தோம். நாங்கள் அதிகமாக ஜெபிக்குந்தோறும், அந்த கட்டி பெரிதாக வளர்ந்து கொண்டே வந்து, முடிவில் அது பக்கவாட்டில் வெளியே தள்ளிக்கொண்டு

வந்தது. நாங்கள் அதை இரகசியமாக வைத்திருந்து (இங்குள்ள ஒரு சிலருக்கு மாத்திரமே அது தெரியும்), என்ன நேரிடுகிறதென்று கவனித்து வந்தோம். நாட்கள் அவ்வாறே கடந்து சென்றன.

முடிவில் நான் கனடாவிலிருந்து திரும்பி வந்த போது....... அங்கு இந்திய பழங்குடியினரை கிறிஸ்துவிடம் நடத்த கர்த்தர் கிருயை செய்தார் (கர்த்தருக்கு சித்தமானால், அவர்களுக்கு கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் ஞானஸ்நானம் கொடுக்க, நான் மறுபடியும் வசந்த காலத்தின் போது அங்கு செல்வேன்). நான் திரும்பி வந்த போது, அவளுக்குச் செல்ல சமயம் வந்தது - நான் நியூயார்க்கிலிருந்த போது; இல்லை, இங்கிருந்த போது ..அவளுக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட அல்லது கடைசி முறையாக மருத்துவ பரிசோதனை செய்யப்பட சமயம் வந்தது. நான் நியூயார்க்குக்கு சென்றிருந்தேன். நான் திரும்பி வரும் வழியில், இந்த இடத்திற்கு வந்து. அங்கு சென்றேன் ... இங்கு கூட்டத்தை நடத்தி முடித்த பின்பு - கடைசி கூட்டத்தை - நான் சகோ. உட் வீட்டிற்கு சென்று அங்கிருந்து அவளைத் தொலைபேசியில் கூப்பிட்டேன். அவள், “பில், துணிகள் அதன் மேல் பட்டாலும் கூட, என்னால் வேதனை பொறுக்க முடியவில்லை”

என்றாள், அது அவளுடைய பக்கவாட்டிலிருந்து வெளியே இப்படி பிதுங்கி வந்திருந்தது. அந்த பக்கத்திலுள்ள அவளுடைய கால்- அவள் நொண்டி நடந்தாள். அதுவே அவளுக்கிருந்த மிகவும் மோசமான வாரம், அவள் அங்கு உட்கார்ந்து கொண்டு, நான் தொலைபேசியில் பேசுவதைக் கேட்டாள் - அவளுக்கிருந்த மிகவும் மோசமான வாரம்.

29. அவள், “நான் நாளை மறு நாள் மருத்துவ பரிசோதனைக்குச் செல்ல வேண்டும்” என்றாள்.

நான், “ஓ, தேவனே, அவர்கள் அறுவை சிகிச்சை செய்தால், கிறிஸ்துமஸின் போது நாங்கள் வீட்டிற்கு செல்லாதபடி அது தடுத்து விடும். அப்பொழுது நான் அங்கிருப்பேன் என்று ஜனங்களிடம் கூறி விட்டேனே” என்று நினைத்தேன். “என்ன ஒரு நேரம்... ஓ, என்னே” என்று எண்ணினேன். “அவர் அறுவை சிகிச்சை செய்ய வேண்டுமானால், கிறிஸ்துமஸ் கழியும் வரைக்கும் அதை நீட்டி வைக்கும்படி அவரிடம் கூறலாமா” என்று நினைத்தேன். பிறகு நான் யோசித்தேன்; ஒருக்கால் அது புற்று நோய் கொண்டதாக இருக்குமானால், அது தீங்கு விளைவிப்பதாயிருக்கும். அது சிறுநீரகத்தில் பரவி, அதுவும் புற்று நோய் கொண்டதாக மாறி

அவளைக் கொன்று விடும். “நான் என்ன செய்வேன்?” என்று எண்ணினேன்.

மேடா, “சரி, பிறகு என்னை தொலைபேசியில் கூப்பிடுங்கள்” என்றாள், நான் ஷ்ரீவ்போர்ட்டை அடையும் அன்று (அதாவது அதற்கடுத்த நாள்) அவள் மருத்துவ பரிசோதனைக்குச் செல்ல வேண்டும். எனவே அவள்… திருமதி நார்மன் அவளுடன் கூட சென்றாள். உங்கள் எல்லாருக்கும் திருமதி நார்மனைத் தெரியும் - இந்த கூடாரத்துக்கு வருபவர்களுக்கு. என் மனைவியை இவள் சிறப்பு மருத்துவரிடம் கூட்டிச் செல்வது வழக்கம். எனவே என் மனைவி. “முதல். இரவு கூட்டம் முடிந்து திரும்பி வந்தவுடன் என்னை தொலைபேசியில் கூப்பிடுங்கள். ஏனெனில் இவ்விரண்டு இடங்களுக்கும் இடையே நேரத்தில் வித்தியாசம் உண்டு (இரண்டு மணிநேரம். இப்பொழுது நான் என்ன செய்யவேண்டுமென்று உங்களிடம் கூறுகிறேன்” என்றாள்.

நான், “சரி” யென்றேன்,

30. எனவே நான் புறப்பட்டு சென்றேன். அடுத்த நாள் காலை அந்த இடத்தை விட்டுச் செல்வதற்கு முன்பு, நான் பில்லியோடும்

லாயிசோடும் தொடர்பு கொள்ள எத்தனித்தேன். அவர்களிருவரும் இப்பொழுது இங்கு உட்கார்ந்து கொண்டிருக்கின்றனர். எப்பொழுதுமே.... எங்களிடம் சகோ. பாமர் எங்களுக்கு மெத்தை தைத்துக் கொடுத்த ஒரு பழைய 'ஸ்டூல்' (Stool) உள்ளது. (ஸ்டூல்' என்பது ஒருவர் உட்காரக் கூடிய இருக்கை அதற்கு நாற்காலிக்கு இருப்பது போல் பின்னால் சாய்ந்து கொள்வதற்கு ஒன்றுமிராது - தமிழாக்கியோன்). நாங்கள் எப்பொழுதுமே அந்த 'ஸ்டூல்ச் சுற்றிலும் ஒன்று சேர்ந்து ஜெபம் செய்வது வழக்கம்.... மெத்தை தைத்த ஸ்டூல். நான் கூட்டங்களுக்குச் செல்லும் போது, நாங்கள் அதைச் சுற்றிலும் ஒன்று சேர்ந்து தேவன் எங்களுக்கு உதவி செய்யும்படி ஜெபிப்போம்.

நான் அங்கு சென்று இரண்டு நாட்கள் ஆயின. எனக்குத் தனிமை உணர்வு ஏற்பட்டது. வீட்டிலே... பிள்ளைகள் சென்று விடுவார்கள், அவளும் சென்றுவிடுவாள். ஒரு காலத்தில் எனக்கு அப்படிப்பட்ட அனுபவம் உண்டாயிருந்தது என்று உங்களில் அநேகருக்குத் தெரியும் - யாருமில்லாத வீட்டுக்குச் செல்லுதல். என் மனைவி ஹோப்பை நான் மாத்திரம் அடக்கம் செய்தேன். நான் .... அந்த நிலை மீண்டும் வருகிறது. நான் வீடு திரும்பினவுடன், "நான்

ஜெபம் செய்து, பிறகு பில்லியையும் லாயிசையும் கூட்டிக் கொண்டு செல்வேன்" என்று நினைத்தேன்.

நான் ஜெபம் செய்யத் தொடங்கின போது, "கர்த்தாவே, இன்று காலை இதைச் சுற்றிலும் அவர்கள் இல்லை. அவர்களுக்கு நீர் உதவி செய்து அவர்களை ஆசிர்வதிப்பீராக. நாங்கள் எல்லோரும் மறுபடியும் இந்த இடத்திற்கு வரும்படி அருளும்" என்றேன். நான், "அவர்கள் வேறு இடத்தில் இருப்பதன் காரணம், ஒரு தரிசனத்தின் மூலம் நீர் என்னை அங்கு அனுப்பினீர். அதை நிறைவேற்றிவிட்டீர். அடுத்தபடியாக நான் என்ன செய்ய வேண்டுமென்று நீர் கூறப் போகின்றீர் என்பதைக் காண நான் காத்திருக்கிறேன். அவளுக்கு நீர் இரங்கவேண்டுமென்று ஜெபிக்கிறேன். அங்கு நடக்கவிருக்கும் கூட்டத்தில் எனக்கு உதவி செய்வீராக" என்று இவ்வாறு தொடர்ந்து ஜெபித்துக் கொண்டே சென்றேன். நான், "அது புற்றுநோயாக மாற விடாதேயும். அதை எடுத்துவிட, மருத்துவர் அடுத்த ஆண்டு முதலாம் தேதிக்கு பிறகு வரை காத்திருக்கட்டும். அவளை இந்நிலையில் காண எனக்கு விருப்பமில்லை ...." என்றேன். நான் மேலும், "கர்த்தாவே, அன்று காலை அவள் அதை வேண்டு மென்று செய்யவில்லை. அவள் அப்படி செய்ய

வேண்டுமென்று நினைக்கவில்லை. கர்த்தாவே, நான் கூட்டங்களுக்கு செல்வதைக்குறித்தும், கூட்டங்களின் நிமித்தம் அநேக மாதங்கள் வெளியில் தங்குவதைக் குறித்தும் அவள் ஒரு முறையாவது ஒரு வார்த்தையும் கூட கூறினதில்லை - அது எதுவாயிருந்தாலும் அவள் ஒரு முறை கூட வாயைத்திறந்து ஒன்றும் கூறினதில்லை. அவள் எப்பொழுதுமே சலவைக்கு என் துணிகளை அனுப்பி, என் "ஷர்ட்டுகளை அவளே துவைத்து, நான் கூட்டத்திற்கு செல்வதற்காக எல்லாவற்றையும் ஆயத்தம் செய்து வைப்பாள். இவைகளைச் செய்த பிறகும், அவள் எவ்வாறு தேவனை சேவிப்பது என்று யோசிப்பாள்" என்றேன், **ஸ்திரீகளே, உங்கள் கணவருக்கு சேவை செய்யும் போது, நீங்கள் தேவனுக்கு சேவை செய்கின்றீர்கள்.** நிச்சயமாக. இப்பொழுது..... பிறகு நான் களைப்புடன் வீடு திரும்புவேன். ஜனங்கள் எல்லாவிடங்களிலு மிருந்தும் வருவார்கள், நான் எங்காவது மீன் பிடிக்கும் பயணத்தையோ, வேட்டை பயணத்தையோ மேற்கொள்ள வேண்டி வரும், அந்நிலையில் அநேக பெண்கள் கோபம் கொண்டிருப்பார்கள். இவள் என்ன செய்தாள்? என் வேட்டை உடைகளை எனக்காக ஆயத்தப்படுத்தி

என்னைப் போக விட்டாள். நான், “கர்த்தாவே, அவள் வேண்டுமென்று செய்யவில்லை. அவளுடைய பிரசவம் அறுவை சிகிச்சையின் மூலம் நடத்தப்பட்டதால், மூன்று முறை அவளுடைய வயிற்றை அறுத்து திறக்க வேண்டியதாயிற்று. அவளுக்கு மீண்டும் அறுவை சிகிச்சை நடப்பதைக்காண நான் விரும்பவில்லை” என்றேன்.

அப்பொழுது என் அறையில் ஒரு சத்தத்தைக் கேட்டேன். நான் மேலே நோக்கின போது ஒரு சத்தம், “எழுந்து நில்” என்றது. “**நீ என்ன கூறினாலும், அதன்படி நடக்கும்**” என்றது.

நான் ஒரு நிமிடம் அமைதியாயிருந்தேன். “**மருத்துவரின் கை அவளைத் தொடுதற்கு முன்பு, தேவனுடைய கரம் அந்த கட்டியை எடுத்துப்போட்டு, அது காணாமலிருப்பதாக**” என்றேன்.

என்னைப் பொறுத்த வரையில், அத்துடன் அது முடிந்து விட்டது. அவளை நான் தொலைபேசியில் கூப்பிடவில்லை, நாங்கள் தொடர்ந்து கூட்டங்களை நடத்தினோம். நான்

சென்று பில்லியையும் லாயிசையும் அழைத்துத் கொண்டு, ஷ்ரீவ் போர்ட்டுக்குச் சென்றேன்.

31. அடுத்த நாள் இரவு அவளை நான் தொலை பேசியில் கூப்பிட்டேன். அவள் மகிழ்ச்சி கொண்டாள். அவள், "பில், உங்களிடம் ஒன்றைக் கூற விரும்புகிறேன்..." என்றாள். (அவள் இங்கிருக்கிறாள். அது உண்மையென்று அவள் ருசுப்படுத்த முடியும்). அவள் நொண்டிக் கொண்டே மருத்துமனைக்கு செல்ல வேண்டிய தாயிருந்தது. அவள் நர்ஸுடனும் திருமதி நார்மனுடனும் அறைக்குள் சென்று, பரிசோதனைக்காக மேலாடையை [gown] உடுத்துக் கொண்டாள். அவளால் எழுந்து மேசையின் மேல் படுக்க முடியவில்லை, அந்த கட்டி இவ்வளவு பெரிதாக தொங்கிக் கொண்டிருந்தது. அவள் ..... மருத்துவர் அறைக்குள் நுழைந்து அவளுடன் பேசிக் கொண்டிருந்தார். அவளைத் தொட்டு பரிசோதனை செய்வதற்காக பரிசோதனை மேசையை உயர்த்தி பரிவாக்கினார். அவர் தொடுவதற்கு முன்பே அது மறைந்து விட்டது. கட்டி எந்த பக்கம் இருந்தது என்று மருத்துவருக்கு தெரியவில்லை.

32. அவர், "ஒரு நிமிடம் பொறுங்கள்" என்றார். அவர் வரைபடங்களுடனும்,

படங்களுடனும் தேடின போதும், அதன் சிறிதளவையும் கூட அவரால் கண்டு பிடிக்க முடியவில்லை. அவர் மீண்டும் மீண்டும் அவளை பரிசோதனை செய்தார். அவர், "**என்னால் இதற்கு விளக்கம் தர இயலாது. ஆனால், திருமதி பிரான்ஹாமே, அந்த கட்டி அங்கு இல்லை**" என்றார். அதன் பிறகு அவளுக்கு அதற்கான எந்த அறிகுறியும் இருக்கவில்லை

அது என்ன? கவனியுங்கள், அது சொன்ன விதமாகவே நிறைவேறினது: "மருத்துவரின் கை அதை தொடுவதற்கு முன்பு." ஒரு வினாடிக்குள் அவருடைய கை அதை தொட்டிருக்கும். தேவனுடைய வார்த்தை எவ்வளவு பிழையற்றதாயுள்ளது!


என் மனைவி இங்கு இருக்கிறாள். நாங்கள் இருவரும் தேவனுடைய சமுகத்தில் இருக்கிறோம். மருத்துவரின் கை அவளுடைய சரீரத்தைத் தொடுவதற்கு முன்பு- அது அவளிடம் இப்படி வந்து கொண்டிருந்தது - ஏதோ ஒன்று சம்பவித்தது. கட்டி அவளை விட்டுப் போய் விட்டது. அவர்களால் அதை கண்டுபிடிக்க முடியவில்லை. அவர் இவ்வாறு கூறினார் - அப்படித்தான் நினைக்கிறேன், இல்லையா இருதயத்துக்கு இனியவளே? "திருமதி பிரான்ஹாம்,

உங்களிடம் மீண்டும் உறுதிபடுத்த விரும்புகிறேன்" அப்படித்தானே அவர் சொன்னார்? சரி "அந்த கட்டி ஆங்கில்லை. உங்களுக்கு கட்டியே இல்லை" அது என்ன? கர்த்தருடைய வார்த்தையின்படி பிழையின்றி அப்படியே நிறைவேறுதல். ஆமென்.

***செய்தி:*** பார்வையைத் திருப்பி இயேசுவை நோக்கிப் பாருங்கள், டிசம்பர் 29, 1963

★★★★★





3. The Branham family group. To the right are Billy Paul, Becky and Brother Branham's wife, Meda Marie.

# “உலகத்திலிருக்கிறவனிலும் உங்களிலிருக்கிறவர் பெரியவர்”



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 63-11-10E உங்களிலிருக்கிறவர்

---

76 நான் கொலராடோவின் மலையின்மேல் இருந்த போது, அங்கு உலர்ந்திருந்தது. வேட்டை பொருள் சொற்பமாக இருந்தது. சகோதரன் வீலரை கர்த்தர் ஆசீர்வதித்து ஒரு நல்ல பரிசு அளித்தார். அதுவே அவர் முதன்முறையாக காட்டில் வேட்டையாடுவது. கர்த்தர் அவரை ஆசீர்வதித்தார். அதன் பின்பு நானும் இருபது ஆண்டு காலமாக எதிர்ப்பார்த்திருந்த ஒரு பெரிய பரிசை சுட்டேன். வெகுகாலமாக நானும் சகோதரன் பாங்க்ஸும் அதை பின் தொடர்ந்து வந்தோம். என்னுடைய துப்பாக்கியை உஷ்ணப் பிரதேசத்தில் உபயோகித்துவிட்டு, குளிர் பிரதேசத்திற்குக் கொண்டு வரும்போது அதன் கண்ணாடி சற்று பெரிதாகி விடுகின்றது. அதன் விளைவாக, குறி சில அங்குலங்கள் தவறிப் போய், மரங்களின் நடுவே இருந்த அந்த மிருகத்தின் மேல், படக்கூடாத இடத்தில் குண்டு பட்டுவிட்டது. அது சற்று கீழே பாய்ந்திருக்குமானால், ஒரு நொடியில் எவ்வித

வலியுமின்றி அந்த மிருகத்தைக் கொன்றிருக்கும். அது சற்று உயரப் பாய்ந்ததால், மிருகம் குதித்துக் கீழே விழுந்தது.

77 பில்லி அப்பொழுது என்னுடன் இருந்தான். "அந்த குண்டு அதைக் கொன்று விட்டது" என்றான் அவன். நானும் அப்படித்தான் நினைத்தேன். ஆனால் நாங்கள் அங்கு சென்றபோது, அதைக் காணோம். பில்லி, "நீங்கள் மரத்தை தான் சுட்டிருக்கிறீர்கள்" என்றான். அப்பொழுது ஒரு எச்சரிக்கை சிக்னல் (Warning Signal) கொடுக்கப்பட்டது. நாங்கள் இருந்த இடத்திற்கு சற்று உயரத்தில் ஏறக்குறைய நூறு பேர் இருந்தனர். சகோதரன் பாமரும் மற்றவர்களும் அதற்கு சாட்சிகள். சகோதரன் ஈவான்ஸ் அங்கிருந்தார். சகோதரன் வெல்ஷ் ஈவான்ஸும் அவருடைய மகன் ரானியும் (சற்று முன்பு அவனை நான் கூட்டத்தில் கூப்பிட்டேன்) 'பசு பாளையம்' (Cow Camp) என்று அழைக்கும் இடத்திற்கு அநேகர் சென்றிருந்தனர். அங்கு மாடு மேய்ப்பவர்கள் தங்கி, சவாரி செய்து, தங்கள் மாடுகளை ஒருபுறம் ஒதுக்கி வைப்பார்கள். நான் கூட முன்பு

அப்பாளையத்தில் தங்கியிருந்து, மாடுகளை ஓட்டி, ஒருபுறம் ஒதுக்கி வைப்பதுண்டு.

78 அங்கு ஏறக்குறைய நூறு பேர் இருந்தனர். அங்கு பனிப் புயல் (Blizzard) உண்டாகும் என்று அறிவிக்கப்பட்டு 'எச்சரிக்கை சிக்னல்' கொடுக்கப்பட்டதால், அங்கிருந்து உடனே புறப்பட்டுச் சென்றுவிட வேண்டுமென்று எல்லோருக்கும் தெரியும். எனவே, சகோதரன் பாமரும் மற்றவர்களும் உடனே புறப்பட்டுச் சென்றுவிட்டனர். ஏனெனில் அவர்கள் கார் மூவகை வேகத்தில் மாத்திரம் செல்லக் கூடியது (three Speed transmission) அவர்கள் உடனே புறப்பட்டுச் செல்ல வேண்டியதாயிற்று. வானிலை மோசமானால், வாரக்கணக்காக அங்கேயே தங்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுவிடும். 'பனிப்புயல் வரப் போகின்றது' என்று வானொலியும் அறிவிக்கின்றன என்று சொல்லி, எங்களுக்கு மேலே இருந்தவர்களும், சுற்றிலும் இருந்தவர்களும் கூட்டம் கூட்டமாகச் சென்றுவிட்டனர். அங்கிருந்து புறப்பட்டு சென்றுவிட வேண்டும் என்று அவர்கள் அறிந்திருந்தனர்.

79 ஆனால் என்னுடன் கூட இருந்த மற்ற சகோதரருக்கு, மானைச் சுடுவதற்கு இரண்டு அனுமதிச் சீட்டுகள் இருந்தன. அவர்களுக்கு சென்றுவிட விருப்பமில்லை. சரி, அப்படியானால் நாம் தங்கலாம் என்று அவர்களிடம் சொன்னேன். ஆனால் ஆறு நாட்களுக்குப் பிறகு ஒரு கூட்டம் டூசானில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. அதற்கு நான் போக வேண்டும்.

80 எனக்கு விவாகமாகி இருபத்திரண்டு ஆண்டுகளா கின்றன. இருபது ஆண்டுகளாக, ஒவ்வொரு விவாக நாளன்றும், நான் மலைக்குச் சென்றிருக்கிறேன். அங்கு ஒரு சிறிய ஸ்தலம் உள்ளது. நான் அங்கு சென்று ஜெபிப்பதுண்டு. என் மனைவியை நான் ஏற்றுக் கொண்ட ஸ்தலம் அதுவே.

81 என் தேன் நிலவன்று, வேட்டைப் பயணம் செல்ல என்னிடம் பணமில்லை. என் மனைவியை தேன் நிலவுக்காக வேட்டைக்குக் கூட்டிச் சென்றேன். அங்கிருந்த ஓரிடத்தையடைய, சுற்றிலுமுள்ள மரங்களைக் காலி செய்ய என் மனைவிக்கு உதவி செய்தேன். அதன் விளைவாக ஒரு சிறு இடம்

எனக்கு அங்கு கிடைத்தது. அங்கு தான் எங்கள் தேன் நிலவை கழித்தோம். ஒவ்வொரு விவாக நாளன்றும், அந்த இடத்திற்கு நான் செல்லும் போது, என் மனைவியை நினைவு கூருவேன். அக்டோபர் 23-ம் தேதியன்று அந்த சீசன் (Season) தொடங்கும். இருபது ஆண்டுகளாக என் விவாக நாளை என் வீட்டில் கழித்ததில்லை; அந்த இடத்தில் தான் கழித்திருக்கிறேன்.

82 அன்று என் விவாக நாளாக இருந்தது. சகோதரன் மான்... நான் அவர்களிடம், "நீங்கள் இங்கு இருக்க விரும்பினால் ஒரு மாதம் இங்கு தங்கவேண்டிய நிலைமை ஏற்பட்டுவிடும்" என்றேன். ஏனெனில் ஒரே இரவில் இருபது அடி உயரத்திற்குப் பனி பெய்வதை, பனிப்புயலின் போது நான் கண்டிருக்கிறேன். அங்கு ஓரிடம் உலர்ந்து காணப்படும். ஆனால் அடுத்த நாள் காலைக்குள், அங்கு தங்குவதற்கென அடிக்கப்பட்ட கூடாரத்தின் உச்சிவரை, பனி பெய்திருக்கும். பனி உருகும்வரை அங்கேயே தங்க வேண்டி நேரிடும். அந்த இடம் காட்டில் பதினைந்து அல்லது இருபது மைல் உள்ளே இருக்கும். ஆனால் ஆபத்தான நிலை

ஏற்படுமானால், அவர்கள் ஹெலிகாப்டரை அனுப்பி உங்களைக் காப்பாற்றுவார்கள். சாதாரணமாக பனியினால் யாரும் மடிந்து போவதில்லை. பனி உருகும் வரை அவர்கள் காத்திருக்க வேண்டும்.

83 பனிப்புயலைக் குறித்த முன்னறிவிப்பைக் கேட்ட மாத்திரத்தில், நாங்கள் தரையில் அமர்ந்தோம். நான், "ஒரு தீர்மானத்துக்கு வாருங்கள். இங்கு நீங்கள் தங்க விரும்பினால், நானும் உங்களுடன் தங்குவேன். நான் மனைவியைத் தொலைபேசியில் கூப்பிட்டு, அவளுக்கு விவாக நாள் வாழ்த்து கூறிவிடுவேன். இங்கு நாம் தங்க வேண்டுமானால் திண்பண்டம் வாங்க வேண்டும்" என்றேன். எங்களிடம் இருந்த ரொட்டி தீர்ந்துவிட்டது. 'பான் கேக்' (Pancake) தின்பண்டத்தை நான் கண்ணால் காணக்கூட விரும்பவில்லை. ஏனெனில் கனடாவில் இருபத்தொன்று நாட்களாக அதையே தின்றதால், சலித்துப் போய்விட்டது. எனவே நான் ரொட்டி வாங்க வேண்டுமென்று விரும்பினேன்.

84 அவர்கள் தங்கலாமென்று தீர்மானித்தனர். சகோதரன் மானும் நானும் கீழே சென்று மளிகை சாமான்கள் வாங்கினோம். நான் மனைவியைத் தொலைபேசியில் கூப்பிட்டபோது, யாரும் பேசவில்லை... மளிகை சாமான்கள் வாங்கி அதைக் கட்ட ஒரு மணி நேரம் பிடித்தது. அதுவரை நான் காத்திருந்து, மீண்டும் என் மனைவியைத் தொலைபேசியில் கூப்பிட்டேன். அப்பொழுதும் என் மனைவி பேசவில்லை, நான் சகோதரி ஈவான்ஸை தொலைபேசியில் கூப்பிட்டேன். அவர்கள் இப்பொழுது இங்கிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். ஆம், சகோதரன், சகோதரி ஈவான்ஸ் இருவரும் இங்குள்ளனர்.

85 நான் சகோதரி ஈவான்ஸை தொலைபேசியில் கூப்பிட்டேன். அவர்கள், "நான் சகோதரி பிரான்ஹாமைத் தொலைபேசியில் கூப்பிட்டு, உங்கள் சார்பாக விவாக நாள் வாழ்த்து தெரிவித்து விடுகிறேன்" என்றார்கள். என் மனைவி அப்பொழுது குழந்தைகளுக்கு மளிகை சாமான்கள் வாங்க கடைக்குச் சென்றிருந்தாள்.

நாங்கள் திரும்பி மலைக்கு வந்தோம். அடுத்த நாள் காலையில் வானத்தில் மேகங்கள் மாத்திரமேயிருந்தன. மழை காலத்தில் மழை பெய்யாததால் எல்லாமே உலர்ந்து கிடந்தது. உலர்ந்த நிலையின் காரணமாக, வேட்டை சீசனை அவர்கள் இன்னும் சில நாட்கள் நீடித்து வைக்க வேண்டியிருந்தது.

86 அன்று காலை நான் சகோதரரிடம், "முதல் துளிமழை, அல்லது முதல் பனி, அல்லது முதல் கல் மழை (Sleet), எது விழுந்தாலும், உங்களால் கூடுமானவரை துரிதமாக முகாமிற்குச் சென்றுவிடுங்கள். ஏனெனில் பதினைந்தே நிமிடங்களில் உங்கள் கைகளையும் கூட நீங்கள் காணமுடியாத அளவிற்குப் பனிபெய்துவிடும். பாருங்கள்? அது சுழன்று சுழன்று அடிக்கும் தேசத்தைப் பற்றி எவ்வளவு நன்றாக நீங்கள் அறிந்திருந்த போதிலும் திசைகெட்டு விடுவீர்கள். எனவே, முகாமிலேயே தங்கியிருங்கள். இல்லையேல், மடிந்து போவீர்கள், ஏனெனில் சில நேரங்களில் கல்மழை வேகமாகப் பெய்து காற்றடிக்கும் போது, உங்களால் மூச்சுவிடவும் முடியாது. அங்கேயே நீங்கள் இறந்துபோக நேரிடும்.

எனவே கல் மழை பெய்யத் தொடங்கினவுடனே, உங்களால் முடிந்தவரை, எங்கிருந்தாலும் துரிதமாக முகாமிற்குச் சென்றுவிடுங்கள்“ என்றேன்.

87 "நீங்கள் மேலே சென்று கணவாயில் உட்காருங்கள். நான் இன்னும் உயரச் சென்று மலையிலிருந்து கல்லை உருட்டி, மான்களைப் பயப்படுத்தி கீழே ஓட்டி விடுகிறேன். உங்களுக்கு வேண்டிய மானை நீங்கள் சுடுவதற்காக தெரிந்து கொள்ளுங்கள்" என்றேன்.

88 எனவே நான் மேலேறிச் செல்லத் தொடங்கினேன். 'சாடில்' (Saddle) என்று நாங்கள் வழக்கமாக அழைக்கும் இடத்தை நான் அடைந்தேன். அந்த இடத்தைக் கடந்துதான் நாங்கள் 'க்வேக்கர் நாப்' (Quaker Knob) என்னும் இடத்திற்குப் போக வேண்டும். அது மிகவும் உயரமுள்ள இடம் அந்த 'சாடில்லை' நான் ஏறக்குறைய அடைந்துவிட்ட தருணம், மேகங்கள் கருமையாகத் தொடங்கின. மேலே வாகனம் எதுவும், மாடு மேய்ப்பவர் எவரும் இல்லை. சில நிமிடங்களுக்குள் மழை பெய்ய தொடங்கினது.

என் துப்பாக்கியை 'கோட்' (Coat) டுக்குள் மறைத்துக் கொண்டு, தூரப்பார்வை கண்ணாடி மங்காதபடிக்கும், துப்பாக்கியின் குழாய் நனையாதபடியும் செய்தேன். ஒரு கரடியை சந்திக்க நேர்ந்தால், என்ன செய்வது என்று நினைத்துக் கொண்டே, தூரப் பார்வை கண்ணாடியை இப்படிப் பிடித்துக் கொண்டு, சற்று மரத்தினடியில் அமர்ந்தேன். அங்கு "தேவனாகிய கர்த்தாவே, நீரே மகத்தான யேகோவா. உம்மை நான் நேசிக்கிறேன்" என்று சொல்லி ஜெபம் செய்தேன்.

89 எனக்குத் எத்தனை அனுபவங்கள் உண்டாயிருக் கின்றன! சகோதரன் பாமருக்கும் மற்ற சகோதரருக்கும், கழுகு இளைப்பாறும் ஸ்தலத்தையும், அவ்விடமிருந்து அது உயர பறந்து செல்வதையும் நான் காண்பித்துக் கொடுத்தேன். அங்கு தான் இவையாவும் சம்பவித்தது. அங்கு இருப்பது என் மனத்திற்குகந்த செயலாகும். மலைகளின் மேல் ஆண்டவருடன் எத்தனையோ மகத்தான அனுபவங்களைப் பெற்றிருக்கிறேன். எனவே அங்கு சென்றால் அவரைக்

காணாமலிருக்கவே முடியாது. அவர் எங்கும் இருக்கிறார்.

90 அங்கு அமர்ந்தேன். அப்பொழுது சிறு கல்மழை பெய்யத் தொடங்கினது. சுழல் காற்று வீசத் தொடங்கினது. நான், "எனக்கு கீழே போக நன்றாக வழி தெரிந்தால், இப்பொழுதே கீழே இறங்கிவிடுவது நல்லது" என்று எண்ணினேன்.

91 நான் கீழே பார்த்தபோது, அடிபாகம் எதுவும் தெரியவில்லை. மேகங்கள் சுழன்று கொண்டிருப்பதையும், கல்மழை பொழிவது மாத்திரமே காணமுடிந்தது. "அந்தப் பனிப்புயல் தொடங்கிவிட்டது. பனிப்புயல் வரப் போகின்றது" என்று அநேக நாட்களாக அறிவிக்கப்பட்ட வானிலை முன்னறிவிப்பு நிறைவேறிவிட்டது.

92 கனடாவைச் சேர்ந்த சகோதரன் டாம் சிம்சன் இப்பொழுது இங்கிருக்கிறார். அவர் வானிலை முன்னறிவிப்பைக் கேட்டார். அந்த பாகத்திற்குச் செல்ல வேண்டாமென்று அவருக்கு அறிவுரை கூறப்பட்டது. ஏனெனில் வானிலை முன்னறிவிப்பு, "அங்கு பனிப்புயல்

தோன்றும்" என்று அறிவித்தது. சகோதரன் டாம், இங்கே இருக்கிறீர்களா? இங்குதான் அமர்ந்திருக்கிறார். பனிப் புயல் வந்து கொண்டிருந்தது. எல்லோரும் அதற்காக ஆயத்தமானார்கள்.

93 என் துப்பாக்கியை இப்படி என் சிகப்பு சட்டைக்குள் புகுத்திக் கொண்டு, மலையிலிருந்து கீழே இறங்கி வரத் தொடங்கினேன். 'சாடில்'லிருந்து நான் அரை மைல் தூரம் வந்திருப்பேன். ஓ, அந்த பெரிய பனித்துளிகள் பெய்யத் தொடங்கின. காற்றும் மலையின் மேல் சுழன்று வீசியது. மலையடிவாரத்தை என்னால் காண முடியவில்லை. எனக்கு முன்னால் இருபது அல்லது முப்பது அடி தூரமே காண முடிந்தது. 'ஹாக்பாக்' (Hogback) என்று நாங்கள் அழைக்கும் அந்த சிறிய முகடு (ridge) வரைக்கும் எப்படி வருவதென்று எனக்குத் தெரியும். அப்படியே சிறிய ஓடைக்கு (creek) வந்து, அதைப் பின் தொடர்ந்து கீழே வரவும். அது மோசமான நிலையையடைந்தால் அங்கிருந்து எங்கு செல்ல வேண்டுமென்றும் எனக்குத் தெரியும்.

94 ஆகவே நான் கீழிறங்கி வந்தேன். பாதி வழி வந்தபோது, ஏதோ ஒன்று என்னிடம், இப்பொழுது நான் உங்களிடம் எவ்வளவு தெளிவாக பேசுகின்றேனோ அவ்வளவு தெளிவாக, "நில்! வந்த வழியே பின்னால் போ!"என்றது.

95 "என்ன இவ்விதம் நினைக்கிறேன் ஒருக்கால் அது என் சொந்த சிந்தையாயிருக்கலாம்" என்று நினைத்துக் கொண்டேன். ஆனால் என்னால் ஒரு அடி கூட முன் எடுத்து வைக்க முடியவில்லை.

96 டேவிட் அன்று காலை எனக்கு சான்ட்விச் (sandwich) செய்து கொடுத்திருந்தான். ஒருமுறை அவன் தன் தகப்பனாருக்கு வெங்காயமும் தேனும் போட்டு சான்ட்விச் ஒன்று செய்து கொடுத்தான். அதுபோன்று எனக்கும் ஒரு சான்ட்விச் ஒன்று செய்து கொடுக்க விரும்பினான் போலும்! (அது மாத்திரமே எங்களிடம் இருந்தது). பலோனி (Baloney) என்னும் உணவையும் அவன் செய்து கொடுத்து, காகிதத்தில் சுற்றிக் கொடுத்தான். அதை நான் சட்டைப் பையில் வைத்திருந்தேன். அது நனைந்துவிட்டிருந்தது.

"சற்று நின்று, இதை புசித்துவிடுகிறேன். அப்பொழுது சரியாகிவிடும்" என்று நினைத்துக் கொண்டே, சான்ட்விச்சை சட்டைப் பையிலிருந்து எடுத்து தின்னத் தொடங்கினேன். அப்பொழுது சுமார் 10 மணியிருக்கும் இதை சாப்பிட்டால் சரியாகிவிடுவேன்“ என்று எண்ணியவாறு முன்னால் செல்லத் தொடங்கினேன். ஆனால் ஏதோ ஒன்று என்னிடம், "நீ வந்த இடத்திற்கே திரும்பிச் செல்” என்று கூறினது.

97 "அந்தப் புயலின் வழியாகத் திரும்பிச் செல்வதா?" என்று எண்ணினேன். இன்னும் அரை மைல் தூரம் மலையின் மேல் இருண்ட காட்டின் வழியாகச் செல்லவேண்டும். இங்கிருந்து ஆர்கன் (organ) இசைக்கருவி இருக்கும் தூரம் வரைக்கும் கூட என்னால் காண முடியவில்லை. எனக்கும் வயதாகிக் கொண்டே போகின்றது. முப்பத்து மூன்று ஆண்டு காலமாக நான் கிறிஸ்தவனாக இருந்து வந்துள்ளேன். ஆண்டவர் கூறுவது எவ்வளவு பைத்தியக்காரத் தனமாகத் தோன்றினாலும், அதை முதலில் செய்! ஆண்டவர் சொன்னபடியே செய்!

98 நான் திரும்பி 'சாடில்'லுக்குச் சென்றேன், கல்மழை அதிகமாகிக் கொண்டே வந்தது. இருளும் அதிகமாகச் சூழ்ந்தது. நான் சற்று அமர்ந்து, என் சட்டையை தூரப் பார்வைக் கண்ணாடியின் மேல் போட்டேன். “நான் என்ன செய்து கொண்டிருக்கிறேன்?" என்று வியந்தேன். "நான் ஏன் இங்கு மறுபடியும் வரவேண்டும்?"

99 நான் சில நிமிடங்கள் காத்திருந்தேன். நான் எழுந்த போது ஒரு சத்தம் மிகத் தெளிவாக என்னிடம், "நானே வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தவர்! நானே காற்றையும் மழையையும் படைத்தேன்“ என்றது. நான் என் தொப்பியைக் கழற்றினேன்.

100 "மகத்தான யேகோவாவே, அது நீர் தானா?" என்று கேட்டேன்.

101 அவர், "கடலின் மேல் காற்றடிக்காத படிக்கு அதட்டி யவர் நானே! அலைகள் தாழும்படி செய்தவர் நானே! வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தவர் நானே அணில்கள் தோன்ற நீ கட்டளையிட வேண்டுமென்று உன்னிடம் கூறியவர் நானல்லவா? நீ

கட்டளையிட்ட மாத்திரத்தில் அவை சிருஷ்டிக்கப்பட்டதல்லவா? நானே தேவன்" என்றார்.

102 ஒரு சத்தம் உங்களிடம் பேசினால், அது கூறுவதை வேத வாக்கியங்களுடன் ஒப்பிட்டுப் பாருங்கள். அது வேத வாக்கியங்களுடன் பொருந்தாவிட்டால், அதை விட்டுவிடுங்கள். அது எவ்வளவு தெளிவாக இருந்தாலும், அதை விட்டு அகன்று விடுங்கள்.

103 நான், "ஆம் ஆண்டவரே“ என்றேன்.

104 அவர், "அந்தப் புயல் காற்றுக்குக் கட்டளையிடு. அது மறைந்துவிடும்" என்றார். இந்த வேதாகமம் எனக்கு முன்பாக இருக்கிறது. எனது ஜீவனே அதில்தான் இருக்கிறது.

105 நான் எழுந்து, “ஆண்டவரே, உமது சத்தத்தை நான் ஒரு போதும் சந்தேகிக்கமாட்டேன்" என்று கூறிவிட்டு, "மேகங்களே, பனிக்கட்டியே, மழையே, கல்மழையே! நீங்கள் வந்திருப்பது எனக்கு விருப்பமில்லை. உங்கள் இடங்களுக்குச் செல்லும்படி இயேசு கிறிஸ்துவின் நாமத்தில்

கட்டளையிடுகிறேன். எங்கள் வேட்டைப் பயணம் முடிவடைந்து, சகோதரர்களை நான் பிரிந்து செல்லும் வரை, சூரியன் உடனே தோன்றி, நான்கு நாட்கள் தோன்றி, நான்கு நாட்கள் சூரிய வெளிச்சம் உண்டாக வேண்டும்" என்று கூறினேன்.

106 காற்று, "ஊ ஊ ஊ ஊ ஷ்" என்று வீசிக் கொண்டிருந்தது. அது 'ஊஷ்' என்று சத்தமிட்டுக் கொண்டே சென்று, பின்னர், 'வ்யூ, வ்யூ' என்ற விதமாய் சப்தம் குறைந்து, முடிவில் நின்று போயிற்று.

107 நான் அசையாமல் நின்றேன். அங்கிருந்த என் சகோ தரர்கள் என்ன நடந்து கொண்டிருக்கிறதென்று வியந்தனர். கல்மழையும், மழையும் நின்று போயின. மலை வழியாக காற்று சுழன்று கொண்டே வந்து, மேகங்களைத் தூக்கிச் சென்றது. அவை நாலா திசைகளிலும் சிதறிச் சென்றன. சில நிமிடங்களில் சூரிய வெளிச்சம் நன்கு பிரகாசித்தது, வெப்பமானது, நான் கூறுவது உண்மை! அது உண்மையென தேவனறிவார்.

108 என் தொப்பியைக் கழற்றின நிலையில் நான் சுற்று முற்றும் பார்த்தேன்.

“எனக்கு மெய்சிலிர்த்தது...

109 நான், “சிருஷ்டி கர்த்தருடைய கரங்களில் எல்லாமே உள்ளது. அவர் என்னிடம் என்ன கூறினார்?" என்று சிந்திக்கலானேன்.

110 என் துப்பாக்கியைக் கையிலெடுத்துக் கொண்டு, தூரப் பார்வை கண்ணாடியை துடைத்துக் கொண்டு, மலையிலிருந்து கீழே இறங்கிச் சென்றேன். அப்பொழுது ஏதோ ஒன்று, “இந்த வனாந்தரத்தில் என்னுடன் கூட நீ ஏன் நடக்கக் கூடாது?" என்று கேட்டது.

111 நான், “ஆம், ஆண்டவரே, என் மனப்பூர்வமாக அப்படிச் செய்வேன். உம்முடன் கூட நடப்பதென்பது இவ்வுலகிலுள்ள எல்லாவற்றையும் விட மிகவும் மகத்துவமானது" என்றேன். எனவே, என் துப்பாக்கியைத் தோளில் தொங்க வைத்துக் கொண்டு, காட்டின் வழியாக நடந்து சென்றேன் (அங்கிருந்த மரங்களின் மேல் கோடாரி இதுவரை பட்டதேயில்லை. அவையாவும் புதிதாக வளர்ந்த மரங்கள்).

112 நான் அவ்விதம் நடந்து சென்று கொண்டிருந்தபோது அந்த இடத்திற்கு சென்றால் என்ன? நேற்று எங்கள் விவாக நாள். என் மனைவி மேடாவைக் கௌரவப்படுத்தும் விதமாக, அவளைச் சிந்தனையில் கொண்டு, “சில நிமிடங்கள் அந்த இடத்தில் கழிக்கலாமே” என்னும் உணர்வு உண்டானது. "அந்த இடம் வரை நான் நடந்து சென்று, எங்கள் விவாக நாளை நினைவு கூர்ந்து அந்த கறுத்த மரங்களின் மற்ற பாகத்தில் நடந்து, 'கோரல் உச்சி'யில் (Corral Peak) நடந்து, மற்ற வழியாக சென்று, இவ்விதமாக நடந்து சென்று, குதூகலிப்பேன்“ என்று எண்ணினேன்.

113 அப்பொழுது நான், “பிதாவே, நீர் என்னுடன் நடந்து வருகிறீர் என்று நானறிவேன். தேவனைக் காட்டிலும் நான் கூட நடந்து செல்லக் கூடிய மகத்தானவர் வேறெவருமில்லை" என்றேன். நான் மலைகளை விட்டு கீழே இறங்கி வந்த பிறகும் சூரிய வெளிச்சம் உண்டாயிருந்தது.

114 பெட்ரோல் நிரப்பும் ஸ்தலங்களில் நான் காரை நிறுத்தினேன். நான்கு நாட்கள் கழித்தும், அந்த பாகத்தில் மழை

பெய்யவேயில்லை. "எவ்வளவு அருமையான நாள்! என்று ஒவ்வொரு நாளும் எண்ணினேன். தினந்தோறும் சூரியன் பிரகாசித்தது. அது சரியா சகோதரர்களே? (சகோதரர்கள் 'ஆமென்' என்கின்றனர் - பதிப்பாசிரியர்) பாருங்கள்? வானத்தில் சிறிதளவு மேகம் கூட இல்லை.

115 நான் பெட்ரோல் நிரப்பும் ஸ்தலத்தையடைந்து, அந்த ஆளிடம், "மிகவும் அருமையான நாள் அல்லவா?" என்றேன்.

"ஆம்" என்றார்.

"பயங்கர வெப்பமான நாளல்லவா?" என்றேன்.

116 அதற்கு அவர், "உங்களுக்குத் தெரியுமா? ஒரு வினோதமான காரியம் சம்பவித்தது. பயங்கரப் பனிப்புயல் வரப்போகின்றது என்று அவர்கள் முன்னறிவித்தனர். ஆனால் திடீரென்று அது நின்றுவிட்டது" என்றார்.

117 நான் நியூ மெக்சிகோவை அடைந்தேன். நானும் என் மகனும் ஒரு பொருளை வாங்க அங்கு ஒரு சிறிய கடைக்குச்

சென்றோம். நான் அங்கிருந்தவரிடம், "அருமையான நாளல்லவா?" என்றேன்.

“ஆம்" என்றார்.

அவர், "மிகவும் உலர்ந்து காணப்படுகின்றது" என்றேன்.

“ஆம், சில நாட்களாகவே உலர்ந்துள்ளது" என்றார்.

“நீங்கள் இந்த இடத்தைச் சேர்ந்தவர்களா?” என்று கேட்டேன்.

118 அவர், "இல்லை! நான் விஸ்கான்சினை (Wisconsin) சேர்ந்தவன். ஆனால் இருபது ஆண்டு காலமாக இங்கேயே வாழ்ந்து வருகிறேன். எனவே, இதையே என் சொந்த இடமாக பாவிக்கலாம்" என்றார்.

119 “அப்படியானால் இங்கு நீங்கள் குடி வந்திருக்கிறீர்கள். மிகவும் தூசி படிந்திருந்ததாகக் காணப்படுகின்றதே" என்றேன்.

120 அதற்கு அவர், "ஒரு விசித்திரமான சம்பவம் நடந்தது. பனிப்புயல் வருமென்றும், அதிக பனி பெய்யும் என்றும் வானிலை

முன்னறிவிப்பு உண்டாயிருந்தது. உண்மையில் அந்தப் பனிப் புயல் தொடங்கியது. ஆனால் அது நின்றுவிட்டது" என்றார்.

121 "அப்படியா?" என்றேன்.

122 நான் வீட்டையடைந்தேன். பனிப்புயல் வரப்போவ தாகவும் அந்த வழியே போகக் கூடாதென்று எச்சரிக்கை விடுக்கப்பட்டதாகவும் சகோதரன் டாம் கூறினார். அவர் நாட்டைக் கடந்து வந்தார். ஆனால் ஒரு துளி மழையோ அல்லது வேறெதுவோ உண்டாயிருக்கவில்லை. அவர் எப்பொழுதும் போலவே இன்றும் தேவனாயிருக்கிறார். பாருங்கள்?

123 நான் மலையில் நடந்து சென்று கொண்டே யிருந் தேன்... ஒலி நாடாவின் இந்தப் பாகத்தை என் மனைவி கேட்கமாட்டாள் என்று நம்புகிறேன். பாருங்கள்? உங்களிடம் ஒன்றைக் கூறப் போகின்றேன். நான் உங்களிடம் உண்மையையே கூறுகின்றேன். அதுதான் சரியான முறையாகும். ஒவ்வொரு விவாக நாளன்றும் நான் இத்தகைய வேட்டைப் பயணம் செல்வதைக் குறித்து என் மனைவி

ஏன் முறுமுறுப்பதில்லையென்று நான் அடிக்கடி யோசிப்பதுண்டு. நான் என்ன நினைத்தேன் தெரியுமா? விவாக நாளன்று அநேகர் வீட்டிற்கு வருவார்கள். நான் பயந்த சுபாவமுடையவன் (nervous) என்று உங்களுக்குத் தெரியுமல்லவா? எப்பொழுதும் நான் தேவனைக் குறித்தும், வேதத்தைக் குறித்துமே பேச விரும்புகிறேன். எனவே, சில நாட்கள் நான் வேட்டைக்குச் சென்றால் அவளுக்குத் தொல்லை சற்று நீங்கியிருக்கும் என்று நினைக்கிறாளோ என்னமோ! என்று எண்ணினேன்.

124 அதற்காக அவளிடம் நான் மன்னிப்புக் கோருகிறேன். இத்தகைய சிந்தை என்னில் எழுந்ததற்காக நான் தேவனிடம் மன்னிப்பு கோருகிறேன். ஏனெனில் இந்த எண்ணம் என் மனதில் எழுந்த வண்ணமாக இருந்தது. அவள் வீட்டு வேலை அதிகம் செய்பவள். சமையலறையிலோ அல்லது வேறெங்காவது அவள் சதா வேலை செய்து கொண்டேயிருப்பாள்...

125 அவளை அறிந்துள்ள உங்களுக்கு துணி சலவை செய்யும் இயந்திரத்தை அவள்

எப்பொழுதும் இயக்கிக் கொண்டேயிருப்பாள் என்பது தெரியும். அவள் வேலை செய்து கொண்டிருக்கும் போது நான் அவளிடம், "துணி சலவை செய்வதை நிறுத்திவிட்டு வந்து என்னுடன் பேசிக் கொண்டிரு. நான் உன்னை நேசிக்கிறேன். நீயும் என்னை நேசிக்கிறாய் என்று நீ கூற விரும்புகிறேன்" என்பேன்.

126 “உங்களை நான் நேசிக்கிறேன் என்று உங்களுக்குத் தெரியும்" என்று அவள் கூறிவிட்டு, மறுபடியும் துணி சலவை செய்யும் பணியில் மும்முரமாக ஈடுபடுவாள்.

127 "அதை நிறுத்திவிட்டு, என்னுடன் உட்கார்ந்து பேசு" என்பேன்.

128 “ஓ, பில் (Bill), எனக்கு எத்தனையோ வேலையிருக்கிறது" என்பாள்.

129 “நான் வேட்டைக்குச் சென்றால், வேலை செய்வதற்கு அவளுக்கு அதிக நேரம் கிடைக்கு மென்று எண்ணுகின்றாள் போலும்" என்று நினைத்துக் கொண்டேன்.

வேதாகமம் எனக்கு முன்னால் இருக்கிறது. நான் தேவனுடைய வார்த்தைக்கு முன்னால் உள்ளதை நீங்கள் காண்கிறீர்கள். நான்

மலையில் நடந்து சென்று கொண்டிருந்தபோது ஏதோ ஒன்று என்னில் சம்பவித்தது.

130 அப்பொழுது தேன் நிலவுக்கு என் மனைவியை அங்கு அழைத்து சென்ற சம்பவம் எனக்கு ஞாபகம் வந்தது. அவள் கறுப்புமயிர் கொண்டவளாய், பழுப்பு நிறக் கண்கள் உடையவளாய் அப்பொழுது மிகவும் அழகாக இருந்தாள். அந்த மரங்களைக் கடந்து செல்வதற்காக சில நேரங்களில் அவளைத் தூக்கிவிட்டு, இப்படியாக கரடி வேட்டையாடும் இடத்தையடைய அவளுக்கு உதவி செய்தேன். நான் கரடியை வேட்டையாடிக் கொல்வதை அவளுக்குக் காண்பிக்க விரும்பினேன். அவள் அப்பொழுது என் 'மாட்டுக்காரப் பையனின்' காலணியை (Cow boy boots) போட்டுக் கொண்டிருந்தாள். (அது இருபத்திரண்டு அல்லது இருபத்தொன்று ஆண்டுகளுக்கு முன்பு நடந்த சம்பவம். எங்களுக்கு 1941ல் விவாகம் நடந்தது) மரங்களைக் கடப்பதற்கென, அவளைத் தூக்கிச் சென்றேன்.

131 “இப்பொழுது பாவம்! அவள் என் தொல்லைகளைப் பொறுத்துக் கொள்கிறாள். அவளுடைய தலைமயிர் நரைத்துவிட்டது

என்றெல்லாம் எண்ணியவாறே நடந்து சென்று கொண்டிருந்தேன். (சகோதரன் பிரான்ஹாம் கனைக்கிறார் - ஆசி). சில நாட்களாக நான் சவரம் செய்யவில்லை. எனக்கும் நரைத்துவிட்டதென்று அப்பொழுது நான் உணர்ந்தேன். ஏனெனில் நரைத்த தாடி வளர்ந்திருந்தது. அப்பொழுது நான், ”கிழவனே, உன் காலமும் முடிவடையப் போகின்றது. நீ ஏதாவது செய்ய நினைத்திருந்தால், அதை துரிதமாகச் செய். உனக்கும் வயதாகிக் கொண்டே போகின்றது“ என்று உள்ளத்தில் எண்ணினேன்.

132 அவ்விதம் நான் நடந்து சென்று கொண்டிருந்த போது, ஏதோ ஒன்று சம்பவித்தது. திடீரென்று (என் நடத்தையிலும் என் கொள்கையிலும்) நான் ஒரு வாலிபனைப் போல் மாறினேன். என்னை ஒரு வாலிபனாகப் பாவித்துக் கொண்டேன். நான் தலைகுனிந்த வண்ணம் இருந்தேன். நிமிர்ந்து பார்த்த போது, என் மனைவி கரங்களை விரித்தபடி எனக்கு முன்பாக நின்று கொண்டிருந்தாள். என் முகத்தை தடவிக் கொண்டே, “மேடா, நீயா அது, அன்பே?" என்று கேட்டேன்.

133 நான் இங்குமங்கும் பார்த்தேன். “என்ன நேர்ந்தது?" என்று நினைத்துக் கொண்டேன். ”அப்பொழுது தான் நான் அவருடன் கூட நடந்து கொண்டிருக்கிறேன்“ என்னும் உணர்வு வந்தது. அதன் பின்பு என் உருவம் மாறினது. நான் மறுபடியும் கிழவனானேன். எனக்கு நேர்ந்த தரிசனம் என்னை விட்டகன்றது.

134 நான் நின்று, என் தொப்பியைக் கழற்றி என் இருத யத்தின் மேல் வைத்துக் கொண்டு, “இயேசுவே, என் இருதயம் எத்தனையோ ஆண்டு காலமாக பாரமாயிருந்து வருகிறது. அவ்விதம் பாரமாயுள்ளது என்று நான் உமக்குச் சொல்லத் தேவையில்லை. நான் மனஸ்தாபப்பட்டேன், எனக்குத் தெரிந்த எல்லாவற்றையும் நான் செய்து கொண்டு வருகிறேன். இருப்பினும் ஏன் இந்தப் பாரம் என்னைவிட்டு அகலவில்லை?" என்று கேட்டேன்.

135 நான் இவ்விதம் நடந்துசென்று, எனக்கு முன்னால் முப்பது அல்லது நாற்பது கெஜம் தூரமுள்ள குன்றையடைந்து அதன் மேலேறிச் சென்றேன். நான் மிகவும்

பலவீனமாயிருப்பது போன்ற ஒரு உணர்ச்சி எனக்குண்டானது. நான் குன்றின் உச்சியையடைந்த போது, மிகவும் பலவீனமடைந்து, தள்ளாட ஆரம்பித்தேன். நான் தொப்பியைப் போட்டுக் கொண்டு என் தலையை அங்கிருந்த புன்னை மரம் ஒன்றின்மேல் சாய்த்தேன். அவ்விதம் நான் நின்று கொண்டிருந்தபோது, சூரிய வெப்பம் என் முதுகின் மேல் விழுந்தது. "அந்த மழையையும் காற்றையும் போக்கின தேவன்" என்று எண்ணிக் கொண்டேயிருந்தேன்.

136 அப்பொழுது 'பட், பட்' என்று ஏதோ ஒரு சப்தம் கேட்டது.

137 “அது என்னவாயிருக்கும்? தண்ணீரெல்லாம் உலர்ந்துவிட்டதே!” என்று எண்ணிக் கொண்டே கீழே நோக்கினபோது, என் கண்ணீர் என் நரைத்த தாடி வழியாய் வழிந்தோடி, தேவன் உலர வைத்திருந்த அந்த உலர்ந்த இலைகளின் மீது விழுவதைக் கண்டேன். நான் மரத்தின் மேல் தலை சாய்த்த வண்ணம் நின்று கொண்டிருந்தேன். என் கரங்கள் கீழே தொங்கிக் கொண்டிருந்தன. என் ஒரு கை துப்பாக்கி கட்டியிருக்கும்

கயிற்றுக்குள் (Sling) இவ்விதம் போடப்பட்டிருந்தது. நான் அங்கு நின்று கொண்டே அழுதேன்.

138 நான், “ஆண்டவரே, உமது ஊழியக்காரனா யிருக்க நான் பாத்திரவானல்ல. நான் அநேக தவறுகள் இழைத்திருக்கிறேன், வேண்டுமென்று நான் தவறுகள் செய்யவில்லை. ஆண்டவரே, நீர் எனக்கு நல்லவராகவே இருந்து வந்திருக்கிறீர்” என்றேன்.

139 என் கண்கள் அப்பொழுது மூடப்பட்டிருந்தன. அப்பொழுது ஏதோ அசைவது போன்ற சத்தத்தைக் கேட்டன.

140 கண்களைத் திறந்து பார்த்தபோது, எனக்கு முன்னால் மூன்று மான்கள் நின்று கொண்டிருந்தன, நான், “சகோதரன் ஈவான்ஸுக்கு ஒன்றும், சகோதரன் உட்டுக்கு ஒன்றும்... அதோ மூன்று மான்கள். இதற்காகவே நான் காத்துக் கொண்டிருந்து, காடுகளில் நடந்து சென்றேன்” என்று எண்ணியவாறே துப்பாக்கியைக் கையிலெடுத்தேன். "இதை என்னால்

செய்யமுடியாது, அப்படிச் செய்யமாட்டேன் என்று நான் ஆண்டவருக்கு வாக்கு கொடுத்திருக்கிறேன்“ என்று கூறி என் எண்ணத்தை மாற்றிக் கொண்டேன்.

141 அப்பொழுது ஏதோ ஒன்று , “ஆனால் அவை உன் முன்னால் நிற்கின்றனவே!" என்றது.

142 நான் , “அப்படித்தான் ஒரு மனிதன் ஒரு முறை தாவீதிடம், கர்த்தர் அவரை (சவுலை) உன் கையில் ஒப்புக் கொடுத்தார் என்றான்” என்று நினைத்துக் கொண்டேன். உங்களுக்கு சவுல் ராஜா வைப்பற்றி தெரியும்.

143 யோவாப் தாவீதிடம், “அதோ அவர் அங்கு படுத்துக் கொண்டிருக்கிறார். அவரைக் கொன்றுபோடும்" என்றான்.

144 “கர்த்தர் அபிஷேகம் பண்ணினவரைக் கொல்லாத படி, கர்த்தர் என்னைக் காப்பாராக" என்றான் தாவீது.

145 அந்த மான்கள் அங்கு நின்றுகொண்டு என்னையே நோக்கிக் கொண்டிருந்தன. நான் "அவை தப்பிப் போகமுடியாது தப்ப அவைகளுக்கு

வழியேயில்லை. அவை முப்பது கெஜ தூரம் கூட இல்லை. என்னிடம் துப்பாக்கியும் இருக்கிறது" என்று எண்ணினேன். அதே சமயத்தில், “அதை என்னால் செய்ய முடியாது. என்னால் முடியவே முடியாது" என்றேன். அது ஒரு பெண் மானும், இரண்டு குட்டிகளுமாயிருந்தன. என்னால் துப்பாக்கியை எடுக்கவே முடியவில்லை. நான் அசையாமல் அப்படியே நின்று கொண்டிருந்தேன் நான், "அவ்விதம் செய்ய மாட்டேனென்று தேவனிடம் வாக்கு கொடுத்திருக்கிறேன். அந்த சகோதரருக்கு இந்த மான்கள் தேவையில்லை. என்னால் முடியாது என்னால் முடியவே முடியாது” என்று எண்ணினேன்.

146 அப்பொழுது அந்தப் பெண் மான் நடந்து அருகில் வந்தது. கவனியுங்கள், நாலைந்து நாட்களாக நூறு பேர்கள் மான்களைச் சுட்ட வண்ணம் இருந்தனர். அதனால் மான்கள் பயம் கொண்டிருக்க வேண்டும். சிகப்பு வண்ணத்தைக் கண்ட மாத்திரத்தில் அவை ஓடி மறைந்துவிடும் (நான் சிகப்பு சட்டையும் சிகப்பு தொப்பியும் அணிந்திருந்தேன்). ஆனால் இந்த மூன்று

மான்களும் அங்கேயே நின்றுகொண்டு என்னையே உற்று நோக்கிக் கொண்டிருந்தன.

147 நான் பெண் மானிடம், “தாயே, உன் குட்டிகளை அழைத்துக் கொண்டு காட்டுக்குச் சென்றுவிடு. நீ இப்பொழுது என் கைக்குள் இருக்கிறாய். உன் உயிரும் என் கைக்குள் இருக்கிறது. ஆனால் நான் உன்னைத் துன்புறுத்தப் போவதில்லை. அவ்விதம் நான் ஆண்டவருக்கு வாக்கு கொடுத்திருக்கிறேன்" என்றேன். ஆனால் அந்தப் பெண் மானோ என்னருகில் வந்து என்னை உற்றுப் பார்த்தது. அந்த குட்டிகளும் கூட அருகாமையில் வந்தன. (சகோ. பிரான்ஹாம் பீடத்தை இருமுறை தட்டுகிறார் - ஆசி). என் கையிலிருந்து புல்லைத் தின்னும் தூரமளவுக்கு அவை அருகாமையில் வந்தன. காற்று அவைகள் மேல் வீசினது. எனவே பெண் மான் திரும்பி சற்று தூரம் நடந்தது. குட்டிகளும் அதைப் பின் தொடர்ந்தன.

148 பின்பு அவை மறுபடியும் என் பக்கம் திரும்பி, என்னருகில் நடந்து வந்தன. நான் அசையாமல் அங்கேயே நின்றேன். நான், "நீங்கள் காட்டுக்குள் சென்றுவிடுங்கள்.

எனக்கும் காடு என்றால் அதிகப் பிரியம். நீங்கள் உயிர் வாழுங்கள். உங்கள் உயிர் என் கரங்களில் இருக்கிறது. ஆனால் நான் உங்களை சும்மா விட்டுவிடுகிறேன். உங்களால் தப்பிச் செல்லவே முடியாது என்று உங்களுக்குத் தெரியும்“ என்றேன். மூன்றே வினாடிகளில் அவை மூன்றையும் என்னால் கொன்றுவிட முடியும். என்னால் எவ்வளவு வேகமாக அவைகளைச் சுட முடியுமோ, அவ்வளவு வேகமாக அவை என்னருகில் இருப்பதால் தப்பி ஓடிவிட முடியாது. எனவே "உங்களை விட்டுவிடுகிறேன். நீங்கள் சென்று உயிர் வாழுங்கள்" என்றேன். நான் அங்கு நின்று கொண்டிருந்தேன். அவை நடந்து காட்டிற்குள் சென்றுவிட்டன.

149 என் முகத்தை நான் இப்படி துடைத்துக் கொண்டேன். அப்பொழுது ஒரு சம்பவம் நடந்தது. அந்தத் தெளிவான வானத்திலிருந்து - மேகத்திலிருந்து அல்ல - ஒரு சத்தம் என்னுடன் பேசினது. இது சிறிது நேரத்திற்குள் நடந்தது. அந்த சத்தம் என்னிடம், "உன் வாக்கை நீ நினைவு கூர்ந்தாய் அல்லவா?" என்றது.

150 நான், “ஆம், ஆண்டவரே" என்றேன்.

151 அவர், "நானும் என் வாக்கை நினைவு கூருவேன். நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை" என்றார். உடனே என் இருதயத்திலிருந்த பாரம் அகன்றது. அதன் பின்பு அது வரவேயில்லை. இனிமேல் அது வராமலேயே இருக்கட்டும்.

152 நான் டூசானுக்கு வந்தேன். அநேக வினோதமான சம்பவங்கள் நடைபெற்றன. இதற்கு முன்பு அத்தனை சம்பவங்கள் நிகழ்ந்ததில்லை. அந்த நேரத்திற்காகவே கர்த்தர் இவையனைத்தும் செய்கிறார் என்று நம்புகிறேன். அந்நேரம் அருகாமையுள்ளது என்று நம்புகிறேன். ஏனெனில் ஏதோ ஒன்று நிகழவேண்டும்.

153 நாம் மாத்திரம் சத்தியத்தை ஏற்றுக் கொண்டால்! நாம் மாத்திரம் வேதம் நமக்கு எவ்வளவு முக்கியம் வாய்ந்தது என்பதை அறிந்து கொண்டால்! "உலகத்திலிருக்கிறவனிலும் உங்களிலிருக்கிறவர் பெரியவர்“. நம்மால்

அதைப் புரிந்து கொள்ள முடியாது. இருப்பினும், நாம் அதை விசுவாசிக்கிறோம் என்று சொல்கிறோம். அது உண்மையென்று நமக்குத் தெரியும். ஆனால் உண்மையில் அதை நம்மால் புரிந்து கொள்ள இயலவில்லை" உலகத்திலிருக்கிறவனிலும் உங்களிலிருக்கிறவர் பெரியவர்" (உங்களிலிருக்கும் எது பெரியது? அதுதான் அபிஷேகம் பண்ணப்பட்ட கிறிஸ்து. கிறிஸ்துவுக்குள் இருந்த அதே தேவன் உங்களுக்குள் இருக்கிறார்.) உலகத்திலிருக்கிறவனிலும் உங்களிலிருக்கிறவர் பெரியவர்"

154 அவர் உங்களுக்குள் இருப்பாரெனில், இனி ஜீவிப்பது நீங்களல்ல. பாருங்கள்? அவரே உங்களுக்குள் ஜீவிக்கிறார். ஏதாவதொன்றைக் குறித்து இனி நீங்கள் நினைக்கமாட்டீர்கள். அதைக் குறித்து அவர் என்ன கூறுகிறாரோ அதுவே முக்கியம் வாய்ந்ததாயிருக்கும். பாருங்கள்? அவர் உங்களுக்குள் இருப்பாரெனில் அவர் கூறியிருப்பதை ஒருபோதும் மறுக்கமாட்டார். அவரால் அப்படிச் செய்யமுடியாது. அவர் கூறியுள்ளதைக்

காத்துக்கொள்வார். தம்மை ஒருவர் மூலம் நிரூபிக்க வேண்டுமென்று எண்ணி, அந்த மனிதனைக் கண்டுபிடிக்க அவர் முயல்கிறார்.

155 எல்லோருக்கும் அவர் அவ்வண்ணமே செய்ய வேண்டுமென்ற அர்த்தமில்லை. மோசே இஸ்ரவேலரை வழி நடத்திச் சென்றபோது, ஒருவன் மாத்திரமே இருந்தான். அவன்தான் மோசே. மற்றவர்கள் அவன் மூலம் அளிக்கப்பட்ட செய்தியைப் பின்பற்றினர். பாருங்கள்? சிலர் அவனைப் பாவனை செய்ய போலியாக எழும்பினர். அப்பொழுது கர்த்தர் மோசேயிடம், "உன்னை அவர்களிடமிருந்து பிரித்துக்கொள்" என்றார் - பூமி அவர்களை விழுங்கின. பாருங்கள்? பாருங்கள்?

156 இப்பொழுது உலகத்திலிருக்கிறவனிலும் உங்களிலிருக்கிறவர் பெரியவர் அவர் இயேசுவுக்குள் இருந்தது போன்றே உங்களுக்குள்ளும் இருத்தல். ஏனெனில் தேவனுடைய அனைத்தையும் அவர் கிறிஸ்துவுக்குள் ஊற்றிவிட்டார். கிறிஸ்துவினுடைய அனைத்தையும் அவர்

சபைக்குள் ஊற்றிவிட்டார். அது தான் தேவன் உங்களுக்குள் இருப்பது. "உங்களிலிருப்பவர்".

157 காற்றும் கடலும் இயேசுவுக்குக் கீழ்ப்படிந்ததில் வியப்பொன்றுமில்லை. அவருடைய வார்த்தைக்கு அவை கீழ்ப்படிந்தன. ஏனெனில் அவை அவர் மூலமாய் உரைக்கப்பட்ட தேவனுடைய வார்த்தைகளாம். அவர் ஒரு மனிதன்; ஆனால் அவர் வார்த்தை மாமிசமானவர் - பாருங்கள்? அவர் பேசினபோது, அது தேவன் அவர் உதடுகளின் மூலம் பேசின சொற்களாயிருந்தது. பாருங்கள்? ஆகவே காற்றும் கடலும் அவருக்குக் கீழ்ப்படிந்ததில் வியப்பொன்றுமில்லை. காற்றையும் கடலையும் சிருஷ்டித்த அதே தேவன் அவருக்குள் வாசம்பண்ணினார். சற்று யோசித்துப் பாருங்கள் சற்று ஆழமாய் சிந்தனை செய்து பாருங்கள் - ஏனெனில் நான் முடிக்கும் தருணத்தில் வந்திருக்கிறேன். அவர் கட்டளையிட்ட மாத்திரத்தில் பிசாசுகள் செயலற்றுப் போயின என்பதில் வியப்பொன்றுமில்லை. மரித்து மண்ணிற்குத் திரும்பிக் கொண்டிருந்தவர்கள் அவருடைய

வார்த்தையைக் கேட்ட மாத்திரத்தில் அப்படியே இருக்கவில்லை. ஏனென்றால் அவரே வார்த்தையாயிருந்தார், மரித்து நான்கு நாட்களாகி அழுகி நாற்றமெடுத்துக் கொண்டிருந்து, மூக்கானது உள்ளே விழுந்து போயிருந்த அச்சமயத்தில் “லாசருவே வெளியே வா” என்று அழைத்தார், இறந்து போயிருந்த அம்மனிதன் காலூன்றி எழுந்து நின்றான். ஏன்? அது தேவன். கிறிஸ்துவுக்குள்ளிருந்தவர் தேவன் அவருடைய வார்த்தைக்கு முன்னால் மரித்தோரும் நிற்க முடியவில்லை. கிறிஸ்துவுக்குள் தேவன் இருந்தார்.

158 கர்த்தர் காற்றை சிருஷ்டித்தார் என்பது நினைவிருக்கட்டும். அவரே கடல் அலைகளையும் படைத்தார். அது வெறும் தண்ணீர். ஆனால் பிசாசு அதற்குள் புகுந்து கொண்டு, நிர்மூலத்தைக் கொண்டு வரக் கருதி, அதை உருண்டோடச் செய்தான். அது போன்று, மனிதர் தேவ புத்திரராயிருக்க வேண்டுமெனும் நோக்கத்துடன் தான், கர்த்தர் மனிதனைப் படைத்தார். ஆனால் பிசாசு அவனுக்குள் நுழையும் போது தொந்தரவு ஏற்படுகின்றது. பிசாசு காற்றுக்குள் நுழைந்து

புயலை உண்டு பண்ணினான். அப்பொழுது காற்றைப் படைத்த சிருஷ்டிகர், "திரும்பிப் போ, நான் தான் உன்னை சிருஷ்டித்தேன்" என்று சொல்ல முடியாதா என்ன? அதே சிருஷ்டிகர் தாம் அன்று நான் சென்றிருந்த மலையின் மேல் நின்று கொண்டிருந்தார் அல்லவா? (சபையோர் 'ஆமென்' என்கின்றனர் - ஆசி) பாருங்கள்? அவர் தாம் ஒரு மீன் துண்டை எடுத்துப் பிட்டு, அந்த துண்டுகளை அதிகரிக்கும்படி செய்தவர் அல்லவா? அவர் அவ்விதம் பிட்க வேண்டிய அவசியம் கூட இல்லை; அவர் கட்டளையிட்டால் மாத்திரம் போதும். அணில்களை சிருஷ்டித்தவரும் அதே சிருஷ்டிகர் அல்லவா? (சபையோர் 'ஆமென்' என்கின்றனர் - ஆசி) பாருங்கள்? கிறிஸ்துவுக்குள் இருந்தவர் இப்பொழுது நமக்குள் இருக்கிறார். பாருங்கள். அவர் செய்த அதே கிரியைகளை இப்பொழுதும் செய்து கொண்டு வருகிறார். அவருடைய வார்த்தைக்கு முன்னால் மரித்தோரும் நிற்க முடியவில்லை.


159 தற்காலத்தில், மரித்துப் போன ஐந்து பேர் உயிரோடெழுப்பப்பட்டதாக ஐந்து

ஆதாரப்பூர்வமான வாக்கு மூலங்கள் நம்மிடமுள்ளன. கர்த்தர் தரிசனம் அருளி, அங்கு நாம் சென்று, அவர்கள் உயிரோடெழுப்பப்பட்டனர். தான் அமர்ந்திருந்த ஆசனத்திலேயே மரித்துப் போன ஒருவர் உயிரோடெழுப்பப்பட்டு, இன்று நம்மிடையே உயிருள்ளவராய் அதோ அந்த இடத்தில் அமர்ந்திருக்கிறார். அவர் மாரடைப்பால் இறந்துபோனார். ஆனால் இன்று உயிருள்ளவராக அவர் நம் மத்தியில் இருக்கிறார். அவருடைய மனைவி ஒரு நர்ஸ். நாங்கள் அங்கு சென்றிருந்தோம். உயிர் அவரை விட்டுப் பிரிந்திருந்தது. அவருடைய கண்கள் மூடியிருந்தன. இன்று அவர் உயிருள்ளவராக இருக்கிறார். பாருங்கள்? ஏனெனில் உலகத்திலிருக்கிறவனிலும் இங்கிருப்பவர் - நம்மிலிருப்பவர் - பெரியவர். பாருங்கள்?

160 அவர் பெரியவர்! அவர் சிருஷ்டி கர்த்தராகிய தேவன். காற்றும் கடலும் அவருக்குக் கீழ்ப்படிய வேண்டும். பிசாசுகள் அவர் முன்னிலையில் தங்கள் வல்லமையையிழந்தன. இயற்கை முழுவதுமே

அவருக்குக் கீழ்ப்படிந்தன. ஏனெனில் அவரே இயற்கையை சிருஷ்டித்தவர். அதை நாம் நினைவில் கூரும்போது, பிசாசின் வல்லமையை அது போக்குவதாயுள்ளது. அதை நாம் புரிந்து கொள்கிறோம். காற்றும் கடலும் தங்களைப் படைத்த சிருஷ்டிகருக்கு கீழ்ப்படிந்தன. பாருங்கள்? சிருஷ்டி கர்த்தர் மாத்திரமே அவ்விதம் செய்ய முடியும். ஏனெனில், “உலகத்திலிருக்கிறவனிலும் உங்களிலிருக்கிறவர் பெரியவர்" உலகத்திலிருக்கிறவன் கொந்தளிப்பை உண்டாக்குகிறவனாயிருக்கிறான். ஆனால் உங்களிலிருக்கிறவரோ சிருஷ்டி கர்த்தர். அவரே காற்றைப் படைத்தவர். காற்றிலுள்ள பிசாசை அவர் கடிந்து கொள்ள முடியும். அப்பொழுது அது அமைதியாகின்றது. புயலிலுள்ள பிசாசை அவர் அதட்ட முடியும். அப்பொழுது புயல் உண்டாகாது. அவரே சிருஷ்டி கர்த்தர். "உலகத்திலிருக்கிறவனிலும் உங்களிலிருக்கிறவர் பெரியவர்".

**அந்த சத்தம் மறுபடியும், “நீ வேட்டையாடிக் கொண்டிருக்கிறாய், உனக்கு வேட்டை பொருள் அவசியம். உனக்கு எத்தனை வேண்டும்?” என்றது. நான் அதிகமாகக் கேட்கக் கூடாதென்று நினைத்து, “நான் மூன்று அணில்கள் கேட்கப் போகிறேன் என்று மனதில் எண்ணி, எனக்கு மூன்று சிவப்பு நிற இளம் அணில்கள் வேண்டும்” என்றேன். அவர், “அப்படியானால், அதைக் குறித்து பேசு” என்றார்.**




சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: நான் கேள்விப்பட்டேன் இப்பொழுதோ காண்கிறேன், நவம்பர் 27, 1965 மாலை

---

தீர்க்கதரிசியாகிய மோசே, தேவனிடம் அவனுக்கு தொடர்பு உண்டு என்பதை அறிந்திருந்தான். அவன் ஆவியின் ஊக்கம் பெற்று, "தரித்து நில்லுங்கள், நீங்கள் தேவன் செய்யும் இரட்சிப்பைக் காண்பீர்கள்; இன்றைக்கு நீங்கள் காண்கிற எகிப்தியரை இனி என்றைக்கும் காணமாட்டீர்கள்" என்றான். அப்படி நடக்கப் போகிறது என்று அவன் எப்படி அறிந்தான்? அவனுக்கு எப்படி தெரியும்? அவன் என்ன பேசினான் என்று அவனுக்கே தெரியவில்லை.

62. ஆனால், அவனுடைய மத்தியஸ்த ஊழியத்தில், அவன் அதை உரைத்தான். அதை எப்படி செய்ய வேண்டுமென்று தேவன் மோசேக்குக் கற்பித்தார். அவர், "மோசே என்னிடம் முறையிடாதே. உன் கோலை உன் கையில் கொண்டு போய் அதை சமுத்திரத்தின் மேல் நீட்டி, இஸ்ரவேல் புத்திரரிடம் நடந்து

போகும்படி சொல்" என்றார். ஆமென்! ஆவியின் ஊக்கம்! நீங்கள் வியாதிப்பட்டிருந்தால், அப்படித்தான் அந்த ஊக்கம் உங்களுக்குள் வருகிறது. நீங்கள் அவதியுற்றிருந்தால், அப்படித்தான் அந்த ஊக்கம் உங்களுக்குள் வருகிறது. அது உங்களுக்கு வெளிப்படுகிறது. அது உங்களுக்கு வெளிப்படுவதை நீங்கள் அறியும் போது, நீங்கள் நான் சுகமடைந்து விட்டேன்" என்று கூறுகிறீர்கள். அப்பொழுது தேவன் நீங்கள் என்ன செய்ய வேண்டுமென்று உங்களிடம் கூறுகிறார்: "எழுந்து நட" ஆமென்! நீங்கள் அப்படி செய்யும் போது, எல்லாம் முடிந்து விடுகிறது. அப்படித்தான் தேவன் செய்கிறார். அப்பொழுது நீங்கள் தேவன் உங்கள் மூலம் வெளிப்படுவதைக் காண்பீர்கள். அப்படி செய்யும்படி தேவன் தான் மோசேயிடம் கூறினார். அங்கு கூடியிருந்த இஸ்ரவேலர் அனைவருமே மோசேக்கு ஆவியின் ஊக்கம் மேலிடுவதைக் கண்டனர். தேவன் தண்ணீரை ஒரு பக்கத்திலிருந்து மறுபக்கம் பிரித்ததை அவர்கள் தங்கள் சொந்த கண்களினால் கண்டனர். அந்த அக்கினி ஸ்தம்பம்

அவர்களை சமுத்திரத்தின் வழியாக வழி நடத்தினது. அவன் தேவனைக் குறித்து கேள்விப்பட்டான், பிறகு அவர்கள் தேவனைக் கண்டனர்.

63. சேனைகள் அவனுக்கு விரோதமாக ஒன்று கூடின போது, யோசுவா ஆபத்தான நேரத்தில் இருந்தான். சூரியன் அஸ்தமித்துக் கொண்டிருந்தது. யோசுவா ஒரு தீர்க்கதரிசி. சேனைகள் மறுபடியுமாக ஒன்றாக இணைந்து அவனுக்கு விரோதமாகப் புறப்பட தருணம் கிடைத்தால், அவன் அநேக மனிதரை இழக்க நேரிடும் என்பதை அவன் அறிந்திருந்தான். எனவே அந்த ஆபத்தான நேரத்தில், ஏதாவதொன்று செய்தாக வேண்டும்.... ஒன்றே ஒன்று மாத்திரமேயுண்டு. அதாவது அவன் சேனைகளை ஓட வைத்தால், அவர்கள் அனைவரையும் அவன் மடங்கடிக்க முடியும். ஆனால் அப்படி செய்ய போதிய வெளிச்சம் இருக்கவில்லை. எனவே யோசுவா அங்கு நின்று கொண்டு, தன் கரங்களையுயர்த்தி, "நான் யுத்தத்தை முடிக்கும் வரைக்கும், சூரியனே, தரித்து நில்! சந்திரனே, நீ ஆயலோன் பள்ளத்தாக்கின் மேல் தரித்து நில்!"

என்றான்; (யோசுவா;10:12). அப்படியே சூரியன் தரித்தது. அவர்கள் யோசுவா பேசுவதைக் கேட்டனர், அதன் பின்பு தேவன் கிரியை செய்வதை தங்கள் சொந்த கண்களினால் கண்டனர். உண்மை!

64. பாருங்கள், நடக்கக் கூடாத ஒரு காரியம் நடப்பதைக் காண்பது முரணான ஒன்று போல் காணப்படுகின்றது. அது " முரணாகக் காணப்பட்டாலும், அது உண்மை . சூரியன் தரித்தது " என்று வேதம் கூறுகின்றது (யோசுவா 10:13). உலகம் உருண்டையாயுள்ளது என்று கருதும் மக்களாகிய நீங்கள் இதைக் குறித்து என்ன நினைக்கிறீர்களோ, எனக்குத் தெரியாது. ஆனால், என்னவாயினும் சூரியன் தரித்தது". யோசுவா, அதை எப்படி செய்யப் போகின்றான் என்று தேவன் அதை எப்படி செய்யப் போகிறாரென்று யோசிக்க வேண்டிய அவசியமே' இருக்கவில்லை, அவன் செய்த ஒன்றே ஒன்று சூரியனே, தரித்து நில்' என்று கூறுவதே. ஒருக்கால் அவன் கூறினது என்னவென்று அறியாமலே அதை அவன் கூறியிருக்க வகையுண்டு. ஏனெனில் தேவன்

தான் அவன் அதை கூறும்படி செய்தார். அது கிரியை செய்தது. அதுவே தான் மாற்கு 11:23: எவனாகிலும் இந்த மலையைப் பார்த்து: நீ பெயர்ந்து, சமுத்திரத்திலே தள்ளுண்டு போ என்று சொல்லி, தான் சொன்னபடியே நடக்கும் என்று தன் இருதயத்தில் சந்தேகப்படாமல் விசுவாசித்தால், அவன் சொன்னபடியே ஆகும். ஆனால் உங்கள் மனதில் சந்தேகம் கொண்டவர்களாய் நீங்கள் அங்கு நின்று கொண்டு அதை சொல்லக் கூடாது. அதை சொல்ல நீங்கள் ஆவியானவரால் ஊக்குவிக்கப்பட வேண்டும். ஆமென்!

65. இதை கூறுவதால் மன்னிக்கவும். அன்றொரு நாள் அந்த காடுகளில் உட்கார்ந்து கொண்டிருந்த போது, (தேவன் என் நியாயாதிபதி. நான் தவறுரைத்தால் இந்த பிரசங்க பீடத்திலேயே விழுந்து மரிக்கக்கூடும்), அந்த வேதவாக்கியம் என வாழ்நாள் முழுவதும் புதிராக இருந்த போது.... அன்று காலை அந்த காடுகளில் நான் உட்கார்ந்து கொண்டு அதைக் குறித்து சிந்தனை செய்து கொண்டிருந்த போது, அந்த சத்தம் என்னுடன் பேசினது.

அவர், "அந்த வேதவாக்கியம், மற்றெல்லா வேதவாக்கியங்களைப் போல் உண்மையானது" என்றார். நான், "அது எப்படி இருக்க முடியும்?" என்று நினைத்தேன். அவர், "நீ..." என்றார். நான் சொன்னேன்... அவர், "பேசு, அது அப்படியே நிறைவேறும். சந்தேகப்படாதே" என்றார். நான் காடுகளில் உட்கார்ந்து கொண்டு அவரிடம் பேசிக் கொண்டிருந்தேன். மூன்று நாட்களாக அணில்கள் ஒன்றும் அங்கில்லை, ஒரு அணிலும் இல்லை. நான் காட்டத்தி மரம் அடர்த்தியாக வளர்ந்துள்ள இடத்தில் உட்கார்ந்து கொண்டிருந்தேன், அணில்கள் அங்கு வருவதேயில்லை.... அணில் வேட்டையாடும் எவரும், அவை காட்டத்தி மரத்தில் இருப்பதில்லை என்பதை அறிவர். நான் அங்கு உட்கார்ந்து கொண்டிருந்தேன், காற்று பலமாக அடித்துக் கொண்டிருந்தது, அது காலை சுமார் பத்து மணியாக இருந்தது. நான் மறுபடியும் யோசித்தேன். அப்பொழுது அந்த சத்தம், நீ வேட்டையாடிக் கொண்டிருக்கிறாய், "ஆபிரகாமுக்கு ஆட்டுக்கடா தேவைப்பட்டது போல, உனக்கு அணில்கள் தேவைப்படுகின்றன" என்றது. "அந்த சத்தம்

எப்பொழுதுமே என்னிடம் உண்மையைக் கூறி வந்துள்ளது, ஆனால் இது விசித்திரமாயுள்ளதே" என்று எண்ணி, "நான் உட்கார்ந்து கொண்டிருந்த இடத்திலிருந்து எழுந்து, என்னுடன் பேசிக் கொண்டிருந்த நபர் எங்கே?" என்று சுற்று முற்றும் நோக்கினேன், அங்கு ஒன்றுமே காணப்படவில்லை. காற்று மாத்திரம் பலமாக அடித்துக் கொண்டிருந்தது. "நான் ஒருக்கால் உறங்கிப் போய், சொப்பனம் கண்டேனா?" என்று எண்ணினேன். இல்லை, நான் உறங்கவில்லை. நான் மரத்தின் மேல் உட்கார்ந்து கொண்டு கவனித்துக் கொண்டிருந்தேன். நான் காலை பத்து மணியளவில் சகோ. உட், சகோ. சாத்மன் அவர்களை அங்கு சந்திக்க வேண்டியவனாயிருந்தேன். அங்கு விவசாயிகள் வேலை செய்து கொண்டு, சோளத்தை சேகரித்துக் கொண்டிருந்தனர்.

66. அந்த சத்தம் மறுபடியும், "நீ வேட்டையாடிக் கொண்டிருக்கிறாய், உனக்கு வேட்டை பொருள் அவசியம். உனக்கு எத்தனை வேண்டும்?" என்றது. நான் அதிகமாகக் கேட்கக் கூடாதென்று நினைத்து,

"நான் மூன்று அணில்கள் கேட்கப் போகிறேன் என்று மனதில் எண்ணி, எனக்கு மூன்று சிவப்பு நிற இளம் அணில்கள் வேண்டும்" என்றேன். அவர், "அப்படியானால், அதைக் குறித்து பேசு" என்றார். நான், "மூன்று சிகப்பு நிற இனம் அணில்களைப் பெறப் போகின்றேன்" என்றேன். அவர், "எந்த வழியாக அவை வர வேண்டும்? என்று கேட்டார்." "நல்லது, நான் இத்தனை தூரம் சென்று விட்டேன்." ஏதோ ஒன்று என்னிடம் இங்கு பேசிக் கொண்டிருக்கிறது" என்று எண்ணினேன் - நான் பேசுவதை நீங்கள் கேட்பது போல். பரலோகத்தின் தேவன், இந்த வேதாகமம் என் இருதயத்தின் மேல் இருக்கும் இந்நேரத்தில், அது உண்மையென்று அறிவார். அவர்... நான், நல்லது... என்று நினைத்து, ஒரு கேலித்தனமான இடத்தை தேர்ந்தெடுத்தேன். அது தொங்கிக் கொண்டிருந்த ஒரு உலர்ந்துபோன கிளை (என் துப்பாக்கி உள்ள இடத்திலிருந்து சுமார் ஐம்பது கெஜ தூரம்). நான், "முதலாம் அணில் அங்கிருக்க வேண்டும்" என்றேன். அது அங்கிருந்தது. என் கண்களை நான் துடைத்துக் கொண்டு திரும்பிப் பார்த்தேன். (என் தலையைத்

திருப்பினேன்). "ஒரு தரிசனத்தை நான் சுட விரும்பவில்லை" என்று நினைத்தேன். நான் மறுபடியும் திரும்பிப் பார்த்தேன். அந்த அணில் அங்கு உட்கார்ந்து கொண்டிருந்தது. நான் ஒரு தோட்டாவை துப்பாக்கிக்குள் போட்டு குறி வைத்தேன். அந்த சிகப்பு நிற இளம் அணிலின் கறுப்பு கண்ணை என்னால் காண முடிந்தது. "நான் ஒருக்கால் உறங்கிக் கொண்டிருக்கிறேனா, இன்னும் சில நிமிடங்களில் நான் எழுந்து விடுவேன். நான் இதைக் குறித்து சொப்பனம் கண்டு கொண்டிருக்கிறேன்" என்று நினைத்தேன். நான் துப்பாக்கியை சரிமட்டமாக வைத்து, அணிலைச் சுட்டேன். அது கிளையிலிருந்து கீழே விழுந்தது. எனக்குத் தெரியவில்லையே. "அதை சென்று பார்க்க வேண்டுமா?" என்று நினைத்தேன். நான் அங்கு நடந்து சென்றேன். அந்த அணில் அங்கு கிடந்தது. அதை நான் கையிலெடுத்தேன். இரத்தம் அதிலிருந்து வடிந்து கொண்டிருந்தது. ஒரு தரிசனத்துக்கு இரத்தம் வடியாது என்று உங்களுக்குத் தெரியும். அதை நான் கையிலெடுத்தேன். அது

ஒரு அணில். என் உடல் முழுவதும் மரத்துப் போனது.

67. நான் சுற்று முற்றும் பார்த்தேன். "தேவனே, அது நீர்தானா?" என்றேன். நான், "இதற்காக உமக்கு நன்றி. நான் சென்று..." என்றேன். அவர், "நீ சொன்னாய்! நீ சொன்னதை சந்தேகப்படுகிறாயா? உனக்கு மூன்று வேண்டும் என்று கூறினாய். அடுத்தது எங்கிருந்து வர வேண்டும்?" என்று கேட்டார். "நான் சொப்பனம் கண்டு கொண்டிருந்தால் தொடர்ந்து சொப்பனம் காண்பேன்" என்று எண்ணினேன். நான் சொன்னேன். "நான் மரத்தின் அருகிலுள்ள ஒரு பழைய கம்பத்தை தேர்ந்தெடுத்தேன். அதன் மேல் விஷமுள்ள பசுங்கொடி ஒன்று படர்ந்திருந்தது. அதில் ஒரு அணிலையும் நீங்கள் ஒருக்காலும் காண முடியாது. நான் அடுத்த அணில் விஷமுள்ள அந்த கொடியிலிருந்து வர வேண்டும்" என்றேன். அப்பொழுது ஒரு சிகப்பு நிற இளம் அணில் அங்கு உட்கார்ந்து கொண்டு, என்னையே பார்த்துக் கொண்டிருந்தது. நான் துப்பாக்கியை கீழே வைத்து விட்டு என் கண்களைப் பிசைந்தேன். நான் மறுபடியும்

திரும்பிப் பார்த்தேன். நான் நினைத்தேன்.... அது தலையை பக்கவாட்டில் சாய்த்த வண்ணம் அங்கு உட்கார்ந்து கொண்டிருந்தது. அந்த அணிலை சுட்டு வீழ்த்தி விட்டு, வீடு செல்லப் புறப்பட்டேன். அப்பொழுது அவர், "நீ மூன்று கேட்டாயே, நீ சொன்னதை சந்தேகிக்கிறாயா?" என்றார். நான், "இல்லை, ஆண்டவரே, நான் சொன்னதை சந்தேகிக்கவில்லை, ஏனெனில் நீர் அதை உறுதிப்படுத்துகிறீர்" என்றேன். இந்த ஒரு வேதவாக்கியம் எனக்குப் புதிராயிருந்தது: "நான் சொனனால்" என்றல்ல "நீ சொன்னால்" இயேசு சொனனால் என்றல்ல, நீயே அதை சொன்னால்.

68. "எப்படியோ அந்த வாய்க்காலுக்குள் நான் நுழைந்து விட்டேன். அவர் இங்கிருக்கிறார் என்றறிவேன். எனக்கு பைத்தியம் பிடித்து விட்டது போல் இருக்கிறது. இதை இன்னும் அதிக கேலித்தன மாக்குகிறேன்" என்றேன். நான், "ஒரு சிகப்பு அணில், அந்த மலையிலிருந்து கீழே இறங்கி இந்த வழியாக வந்து, என் அருகில் வந்து, இங்கிருந்து புறப்பட்டு சென்று அந்த கிளையின் மேல் உட்கார்ந்து அந்த விவசாயியை நோக்க

வேண்டும்" என்றேன். நான் உரைத்தபடியே, அது மலையிலிருந்து கீழே இறங்கி வந்து, இங்கிருந்து புறப்பட்டு அங்கு சென்று உட்கார்ந்து, அந்த விவசாயியை நோக்கினது. அதை நான் சுட்டேன். சாத்தான் என்னிடம். உனக்குத் தெரியுமா, "காடு இப்பொழுது அணில்களால் நிறைந்துள்ளது" என்றான். நான் பன்னிரண்டு மணி வரைக்கும் அங்கு உட்கார்ந்து கொண்டிருந்தேன். வேறு ஒரு அணிலையும் நான் காணவில்லை. அது எதைக் காண்பிக்கிறதென்றால், "தேவன்... அவரே வானத்தையும், பூமியையும் சிருஷ்டித்த கர்த்தர்."

69. இப்பொழுது ஜெபர்ஸன்வில்லில் கேட்டுக் கொண்டிருப்பது, ரைட் என்னும் பெயர் கொண்ட ஒரு குடும்பம். சகோ. உட்டும் நானும் அவர்களைக் காணச் சென்றிருந்தோம். அவர்கள் சபை இராப்போஜனத்துக்கு திராட்சை ரசம் தயாரிப்பவர்கள். சிறிய ஈடித் அறையில் உட்கார்ந்து கொண்டிருந்தாள். அவள் ஊனமுள்ள ஒரு சிறு பெண், தன் வாழ்நாள் முழுவதும் வியாதியாயிருந்தாள். அவளைச் சுகப்படுத்த வேண்டுமென்று நாங்கள்

எப்பொழுதுமே தேவனிடம் முறையிட்டதுண்டு. அவளுடைய சகோதரி ஒரு விதவை. அவளுடைய கணவர் கொல்லப்பட்டார். அவளுடைய பெயர் ஹாட்டி, மிகவும் தாழ்மையுள்ள ஸ்திரீ. நானும் சகோ. பாக்ஸூம் அவளுக்காக ஒரு முயலை வாங்கச் சென்றிருந்த போது, அவர்கள் உணவு சமைத்து நாங்கள் சாப்பிட வேண்டுமென்று கேட்டு கொண்டனர். நாங்கள் எல்லோரும் மேசையைச் சுற்றிலும் உட்கார்ந்து கொண்டு, சில நாட்களுக்கு முன்பு நடந்து இந்த சம்பவத்தைக் குறித்து பேசிக் கொண்டிருந்தோம். நான் மேசையினருகே உட்கார்ந்து இதைக் குறித்து பேசிக் கொண்டிருந்த போது, திடீரென்று நான், என்ன நடந்திருக்க முடியும்? சகோ. ரைட், நீங்கள் வயோதிபர். உங்கள் வாழ்நாள் முழுவதும் நீங்கள் அணில் வேட்டையாடியிருக்கிறீர்கள். சகோ. ஷெல்பி, அணில் வேட்டையாடுவதில் நீர் நிபுணர். சகோ. உட், நீங்களும் அப்படித்தான். நானும் என் சிறு வயது முதற்கொண்டே அணில் வேட்டையாடி வந்திருக்கிறேன், "நீங்கள் எப்பொழுதாவது அணில் காட்டத்தி

மரப்புதரிலும், வேல மரப்புதரிலும் கண்டதுண்டா?" என்று கேட்டேன். "இல்லை, ஐயா" என்றனர். நான், அவை அங்கிருக்கவில்லை. எனக்குத் தெரிந்த ஒன்றே ஒன்று, "அது அதே தேவன். ஆபிரகாமுக்கு ஆட்டுக்கடா தேவைப்பட்ட போது, அவர் யேகோவாயீரேவாக இருந்தார். அவர் தமக்கென்று ஒன்றை அளிக்க முடிந்தது. அதே காரியம் நிகழ்ந்தது என்று நான் விசுவாசிக்கிறேன்" என்றேன்.

70. அங்கு உட்கார்ந்து கொண்டிருந்த அந்த சிறு ஹாட்டி, "சகோ. பிரான்ஹாமே, அது உண்மையேயன்றி வேறொன்றுமில்லை" என்றாள். அவள் சரியானபடி கூறினாள். அவள் அதைக் கூறின போது, பரிசுத்த ஆவியானவர் அந்த வாய்க்காலுக்குள் மறுபடியும் வந்தார், அங்கிருந்த ஒவ்வொருவரும். அதை உணர்ந்தனர். நான் எழுந்து நின்று, "சகோதரி ஹாட்டி, **கர்த்தர் உரைக்கிறதாவது**, நீ அந்த சீரோபோனிக்கியா தேசத்து ஸ்திரீயைப் போல் சரியான வார்த்தையைக் கூறினாய். பரிசுத்த ஆவியானவர் என்னிடம் இப்பொழுது பேசி, உன் இருதயத்தின் வாஞ்சையை உனக்கு

அருளும்படி கூறுகிறார். நான் தேவனுடைய ஊழியக்காரனாயிருந்தால், அது நிறைவேறும். நான் தேவனுடைய ஊழியக்காரனாக இல்லாமற் போனால், நான் ஒரு பொய்காரன், அது நிறைவேறாது, நான் வஞ்சகன். இது தேவனுடைய ஆவியா இல்லையா என்று சோதித்துப் பார்" என்றேன். அவள், "சகோ. பிரான்ஹாம்" என்றாள் (எல்லோரும் அழுதனர்) அவள், "நான் என்ன கேட்பது?" என்றாள். நான், "ஊனமுள்ள உன் சகோதரி இங்கு உட்கார்ந்து கொண்டிருக்கிறாள்" என்றேன்.

71. அவள் நன்கொடையாக அளித்த இருபது டாலர்களை அவளிடம் திருப்பிக் கொடுப்பதற்காக என் ஜேபியில் வைத்திருந்தேன். அந்த ஸ்திரீ அவளுடைய எளிய சிறு பண்ணையிலிருந்து ஆண்டொன்றுக்கு இருநூறு டாலர்கள் வருமானம் கூட பெறுவதில்லை. அவளுக்கு இரண்டு பையன்கள் இருந்தனர். அவர்கள் பள்ளிக் கூட நாட்களில் 'ரிக்கி' களாக இருந்து, அவர்களுடைய தாயை துன்புறுத்தி வந்தனர். பதினைந்து, பதினாறு வயதுடையவர்கள். அவர்கள் அங்கு நின்று கொண்டு நான்

கூறுவதைக் கேட்டு கேலியாக சிரித்தனர். நான், "உனக்கு வயோதிப் பெற்றோர் உள்ளனர். உன்னிடம் பணம் இல்லை. நீ பணத்தைக் கேட்டு, அது உன் மடியில் வருகிறதா என்று பார். உன் சகோதரியின் சுகத்தைக் கேள். அவள் எழுந்து நடக்கிறாளா இல்லையாவென்று பார்" என்றேன். ஆவியின் ஊக்கம் வரும்போது, அதை அறிந்து கொள்ள முடியுமென்று யோபைப் போல் நானும் அறிந்திருந்தேன். நான், "இதோ இங்கு பத்து பேர்களுக்கு முன்பாக நான் நின்று கொண்டிருக்கிறேன். இது நிறைவேறவில்லையென்றால், நான் ஒரு கள்ளத் தீர்க்கதரிசி" என்றேன். அவள், "நான் என்ன கேட்பது?" என்றாள். நான், "நீ செய்யப் போகும் தீர்மானம் உன்னைப் பொறுத்தது. உனக்காக நான் தீர்மானம் செய்ய முடியாது" என்றேன். அந்த ஸ்திரீ சுற்றுமுற்றும் பார்த்தாள். திடீரென்று அவள், "சகோ. பிரான்ஹாமே, என் இருதயத்திலுள்ள மிகப் பெரிய வாஞ்சை, என் இரு பையன்களின் இரட்சிப்பே" என்றாள். "இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே, உன் பையன்களை உனக்குத் தருகிறேன்" என்றேன்.

அங்கு சிரித்து கேலி செய்து கொண்டிருந்த அந்த பையன்கள், அவர்களுடைய தாயின் மடியில் விழுந்து, தங்கள் வாழ்க்கையை தேவனுக்கு அர்ப்பணித்து, அந்த நேரத்திலேயே பரிசுத்த ஆவியினால் நிறைக்கப்பட்டனர். அந்த நேரத்திலேயே! ஏன்? இது உண்மை. இது தவறாயிருக்குமானால் இந்த தேசத்திலுள்ள ஜனங்களுக்கு முன்பாக என்னைக்கொன்று போட தேவனுக்கு அதிகாரமுண்டு. இங்குள்ள உங்களில் அநேகரும், ஜெபர்ஸன்வில்லில் உள்ளவர்களும்; ஜெபர்ஸன்வில் கூடாரம், "ஆமென்" என்று இப்பொழுது ரீங்காரம் செய்வதை என்னால் கேட்க முடிகிறது. ஏனெனில், அவர்கள் அங்கு உட் கார்ந்து கொண்டு இதைக் கேட்டுக் கொண்டிருக்கின்றனர். இது உண்மை! அது என்ன? தேவன் தமது இராஜாதிபத்திய கிருபையினால் அருளும் போது, அது நிறைவேறுகிறது. அதற்கு புறம்பே அது நிறைவேறுவதில்லை.

72. அந்த கடினமான நேரத்தில்... எனக்கு அறிமுகமான மனிதரையும், ஜனங்களையும் சற்று சிந்தித்துப் பாருங்கள். தேவன் புகழ்

வாய்ந்தவர் போன்ற அனைவரையும் கடந்து சென்று, தன் பெயரைக் கையொப்பமிடவும் கூட அறியாத தாழ்மையுள்ள ஒரு ஏழை விதவைக்கு அதை அருளினார். அவள் என்ன கேட்பாள் என்பதை அவர் அறிந்திருந்தார். அதுதான் மிகப்பெரிய காரியம். அவளுடைய சகோதரி மரித்து விட்டாள், அவளுடைய பெற்றோர் என்றாவது ஒரு நாள் மரிக்க வேண்டும், பணம் அழிந்து போயிருக்கும். ஆனால், அவளுடைய பையன்களின் ஆத்துமாக்களோ நித்தியமானவை! அவர்கள் பெற்றுக்கொள்ள வேண்டிய நேரம் அதுவே. "இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் உன் பையன்களை உனக்குத் தருகிறேன்" என்று நான் கூறின மாத்திரத்தில், அவர்கள் தங்கள் தாயின் மடியின் மேல் விழுந்தனர். இங்குள்ள எத்தனை பேருக்கு அது உண்மையென்று தெரியும். உங்களுக்குத் தெரியுமா? பார்த்தீர்களா? ஆம். ஏன்? ஆவியின் ஊக்கம். இப்பொழுது: "உம்மால் அணில்களை சிருஷ்டிக்க முடியும் என்று உம்மைக் குறித்து கேள்விப்பட்டிருக்கிறேன்; உம்மால் ஆட்டுக்கடாவை சிருஷ்டிக்க முடியும் என்று உம்மைக் குறித்து

கேள்விப்பட்டிருக்கிறேன். இப்பொழுதோ என் சொந்த கண்களால் உம்மைக் காண்கிறேன்" தோற்றம், தரிசனம் காணக்கூடியதாகி விடுகிறது. தேவன் ஒன்றை வாக்களித்தால், அதை செய்து முடிப்பார்.

73. கவனியுங்கள், உங்களுக்கு யோசுவாவைப் போல் ஒருக்கால் தேவை எழலாம். யோசுவாவுக்குத் தேவையிருந்தது. அவன் சூழ்நிலையைப் பற்றி சிந்திக்கவேயில்லை. அவன் உரைத்தான். அது தேவன்! சூரியன் தரித்து நின்றதென்று நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? நானும் கூட. அது எப்படி நடந்தது? அதைக் குறித்தெல்லாம் சிந்தனை செய்யாதீர்கள், அது நடந்தது. யோசுவா அதை செய்தான், அவன் தன் கரங்களையுயர்த்தினான். அந்த கடினமான நேரத்தில் அவன் தேவனுடன் தொடர்பு கொண்டான். அது தான் அது நிறைவேறக் காரணமாயிருந்தது. அது சரியான நேரத்தில் நிகழ்ந்தது. ஜீவனுள்ள தேவனின் ஆவி அதற்கான தேவையை அறிந்து, யோசுவா அதைக் கூறும்படி அவனை உந்தினார். அதே தேவன் ஆபிரகாமின் தேவையை

அறிந்திருந்தார். அதே தேவன், இந்த வேதவாக்கியம் உண்மையென்று எனக்கு உறுதிபடுத்த வேண்டுமெனும் அவசியத்தை அறிந்திருந்தார். அதே தேவன் முன் குறிக்கப்பட்ட அந்த இரு பையன்களின் தேவைகளை உணர்ந்து, அந்த நேரத்தில் அதை நிரூபித்து, அவர் வார்த்தையை உறுதிப்படுத்தினார்.

74. பரி.மாற்கு 14ல், ஒரு ஸ்திரீ அவரை விசுவாசித்ததாகக் காண்கிறோம். அவளுக்குத் தேவையிருந்தது. அவருடைய பாதங்கள் கழுவப்பட வேண்டிய அவசியமும் உண்டாயிருந்தது. அவள் செயல்பட அவள் ஊக்குவிக்கப்பட வேண்டியதாயிருந்தது, இப்பொழுது கூர்ந்து கவனியுங்கள்... நாம் முடிப்பதற்கு முன்பு. அவள் செயல்பட, அவள் ஊக்குவிக்கப்பட வேண்டியவளாயிருந்தாள். ஏனெனில், அவள் ஏற்கனவே அவரைக் குறித்து கேள்விப்பட்டிருந்தாள். அவர் ஒரு வேசியின் பாவங்களை மன்னித்ததாக கேள்விப்பட்டாள். அவர், "உங்களில் பாவமில்லாதவன் அவள் மேல் முதலில் கல்லெறியக் கடவர்கள்" என்று அவர்


கூறினதாக அவள் கேள்விப்பட்டிருந்தாள். அவள் அவரைக் குறித்து கேள்விப்பட்டிருந்தாள், இப்பொழுதோ அவள் அவரைக் காண்கிறாள். அவருக்கு பணிவிடை செய்ய வேண்டுமெனும் ஊக்கம் அவளுக்கு ஏற்பட்டது. அது ஒன்று மாத்திரமே உங்களுக்கு நேரிட வேண்டும். பரிசுத்த ஆவியானவர் தாமே, "நீ ஒரு பாவி" என்று உங்களிடம் கூறட்டும். பரிசுத்த ஆவியானவர் தாமே, "நீ தவறு" என்று உங்களிடம் கூறட்டும். பரிசுத்த ஆவியானவர் தாமே, "நீ வேதப் பிரகாரமாகத் தவறு" என்று வேதத்தைக் கொண்டு உங்களுக்கு நிரூபிக்கட்டும். ஏனெனில், அது ஒரே நேர்வழி வாய்க்கால் மூலமாக தேவனுடைய வேதவாக்கியங்கள் அனைத்தையும் உங்களுக்கு வெளிப்படுத்தித் தரும். அது ஒன்றையும் வெறுமனே விட்டுவிட்டு கடந்து செல்லாது. நீங்கள் அப்படி விட்டு விடுவீர்களானால், உங்களுக்கு ஒரு நன்மையும் உண்டாகாது. பரிசுத்த ஆவி உங்களை அதற்கென்று ஊக்குவிக்கும் போது, இந்த வாரத்தில் நாம் பார்த்த விதமாக, உங்கள் ஆத்துமா தேவனுடன் சரியாக இல்லாமல்

போனால், அதனால் ஒரு நன்மையும் உண்டாகாது. கடைசி நாட்களில் கள்ள அபிஷேகம் பெற்றவர்கள் எழும்புவார்கள் என்பதை ஞாபகம் கொள்ளுங்கள். கள்ள இயேசுக்கள் அல்ல, கள்ள கிறிஸ்துக்கள் (அபிஷேகம் பெற்றவர்கள்) எழும்பி, கூடுமானால், தெரிந்து கொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிப்பார்கள்.



# இயற்கைக்கு மேம்பட்டவைகள் 6

## சகோதரி. ஹாட்டி ரைட்டின் மகன்கள் இரட்சிக்கப்படுதல்



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

# செய்தி: நான் கேள்விப்பட்டேன் இப்பொழுதோ காண்கிறேன், நவம்பர் 27, 1965 மாலை, பத்தி எண் 151-165

இப்பொழுது ஜெபர்ஸன்வில்லில் கேட்டுக்கொண்டிருப்பது, ரைட் என்னும் பெயர் கொண்ட ஒரு குடும்பம். சகோ. உட்டும் நானும் அவர்களை காணச் சென்றிருந்தோம். அவர்கள் சபை இராப்போஜனத்துக்கு திராட்சைரசம் தயாரிப்பவர்கள். சிறிய ஈடித் அறையில் உட்கார்ந்து கொண்டிருந்தாள். அவள் ஊனமுள்ள (crippled) ஒரு சிறுபெண், தன் வாழ்நாள் முழுவதும் வியாதியாயிருந்தாள், அவளைச் சுகப்படுத்த வேண்டுமென்று நாங்கள் எப்பொழுதுமே தேவனிடம் முறையிட்டதுண்டு. அவளுடைய சகோதரி ஒரு விதவை. அவளுடைய கணவர் கொல்லப்பட்டார். அவளுடைய பெயர் ஹாட்டி, மிகவும் தாழ்மையுள்ள ஸ்திரீ. நானும் சகோ. பாக்ஸூம் அவளுக்காக ஒரு முயலை வாங்க சென்றிருந்தபோது, அவர்கள் உணவு சமைத்து

நாங்கள் சாப்பிட வேண்டுமென்று கேட்டு கொண்டனர்.

நாங்கள் எல்லோரும் மேசையைச் சுற்றிலும் உட்கார்ந்து கொண்டு, சில நாட்களுக்கு முன்பு நடந்த இந்த சம்பவத்தைக் குறித்து பேசிக்கொண்டிருந்தோம். நான் மேசையினருகே உட்கார்ந்து இதைக் குறித்து பேசிக்கொண்டிருந்த போது, திடீரென்று நான், "என்ன நடந்திருக்க முடியும்? சகோ. ரைட், நீங்கள் வயோதிபர். உங்கள் வாழ்நாள் முழுவதும் நீங்கள் அணில் வேட்டையாடியிருக்கிறீர்கள். சகோ. ஷெல்பி, அணில் வேட்டையாடுவதில் நீர் நிபுணர். சகோ. உட், நீங்களும் அப்படித்தான். நானும் என் சிறுவயது முதற்கொண்டே அணில் வேட்டையாடி வந்திருக்கிறேன், நீங்கள் எப்பொழுதாவது அணில் காட்டத்திமரப் புதரிலும் வேலமரப் புதரிலும் கண்டதுண்டா?" என்று கேட்டேன்.

"இல்லை, ஐயா" என்றனர்.

நான், “அவை அங்கிருக்கவில்லை. எனக்குத் தெரிந்த ஒன்றே ஒன்று, அது அதே தேவன். ஆபிரகாமுக்கு ஆட்டுக்கடா தேவைப்பட்டபோது, அவர் யேகோவாயீரேவாக இருந்தார். அவர் தமக்கென்று ஒன்றை அளிக்க முடிந்தது. அதே காரியம் நிகழ்ந்தது என்று நான் விசுவாசிக்கிறேன்” என்றேன்.

அங்கு உட்கார்ந்து கொண்டிருந்த அந்தசிறு ஹாட்டி, “சகோ. பிரான்ஹாமே, அது உண்மையன்றி வேறொன்றுமில்லை” என்றாள்.

அவள் சரியானபடி கூறினாள். அவள் அதைக் கூறின போது, பரிசுத்த ஆவியானவர் அந்த வாய்க்காலுக்குள் மறுபடியும் வந்தார். அங்கிருந்த ஒவ்வொருவரும், அதை உணர்ந்தனர். நான் எழுந்து நின்று, “சகோதரி ஹாட்டி, **கர்த்தர் உரைக்கிறதாவது**, நீ அந்த சீரோபேனிக்கியா தேசத்து ஸ்திரீயைப் போல் சரியான வார்த்தையைக் கூறினாய். பரிசுத்த ஆவியானவர் என்னிடம் இப்பொழுது பேசி, உன் இருதயத்தின் வாஞ்சையை உனக்கு

அருளும்படி கூறுகிறார். நான் தேவனுடைய ஊழியக்காரனாயிருந்தால், அது நிறைவேறும். நான் தேவனுடைய ஊழியக்காரனாக இல்லாமற் போனால், நான் ஒரு பொய்காரன், அது நிறைவேறாது, நான் வஞ்சகன். இது தேவனுடைய ஆவியா இல்லையா என்று சோதித்துப் பார்'' என்றேன்.

அவள், ''சகோ, பிரான்ஹாம்'' என்றாள். (எல்லோரும் அழுதனர்). அவள், ''நான் என்ன கேட்பது?'' என்றாள்.

நான், ''ஊனமுள்ள உன் சகோதரி இங்கு உட்கார்ந்து கொண்டிருக்கிறாள்'' என்றேன்.

அவள் நன்கொடையாக அளித்த இருபது டாலர்களை அவளிடம் திருப்பிக் கொடுப்பதற்காக என் ஜேபியில் வைத்திருந்தேன். அந்த ஸ்திரீ அவளுடைய எளிய சிறுபண்ணையிலிருந்து ஆண்டொன்றுக்கு இருநூறு டாலர்கள் வருமானம் கூட பெறுவதில்லை. அவளுக்கு இரண்டு பையன்கள் இருந்தனர். அவர்கள் பள்ளிக்கூட நாட்களில், 'ரிக்கி'களாக இருந்து,

அவர்களுடைய தாயை துன்புறுத்தி வந்தனர் - பதினைந்து, பதினாறு வயதுடையவர்கள், அவர்கள் அங்கு நின்று கொண்டு நான் கூறுவதைக் கேட்டு கேலியாக சிரித்தனர்.

நான், “உனக்கு வயோதிப பெற்றோர் உள்ளனர். உன்னிடம் பணம் இல்லை. நீ பணத்தைக் கேட்டு, அது உன் மடியில் வருகிறதா என்று பார். உன் சகோதரியின் சுகத்தைக் கேள். அவள் எழுந்து நடக்கிறாளா இல்லையாவென்று பார்” என்றேன். ஆவியின் ஊக்கம் வரும்போது, அதை அறிந்து கொள்ள முடியுமென்று யோபைப் போல் நானும் அறிந்திருந்தேன். நான், “இதோ இங்கு பத்து பேர்களுக்கு முன்பாக நான் நின்று கொண்டிருக்கிறேன். இது நிறைவேறவில்லையென்றால், நான் ஒரு கள்ளத் தீர்க்கதரிசி” என்றேன்.

அவள், “நான் என்ன கேட்பது?” என்றாள்.

நான், “நீ செய்யப் போகும் தீர்மானம் உன்னைப் பொறுத்தது. உனக்காக நான் தீர்மானம் செய்ய முடியாது” என்றேன்.

அந்த ஸ்திரீ சுற்றுமுற்றும் பார்த்தாள். திடீரென்று அவள், “சகோ, பிரான்ஹாமே, என் இருதயத்திலுள்ள மிகப் பெரிய வாஞ்சை என் இரு பையன்களின் இரட்சிப்பே” என்றாள்.



“இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே, உன் பையன்களை உனக்குத் தருகிறேன்” என்றேன். அங்கு சிரித்து, கேலி செய்து கொண்டிருந்த அந்த பையன்கள், அவர்களுடைய தாயின்

மடியில் விழுந்து, தங்கள் வாழ்க்கையை தேவனுக்கு அர்ப்பணித்து, அந்த நேரத்திலேயே பரிசுத்த ஆவியினால் நிறைக்கப்பட்டனர். அந்த நேரத்திலேயே!

ஏன்? இது உண்மை. இது தவறாயிருக்குமானால் இந்த தேசத்திலுள்ள ஜனங்களுக்கு முன்பாக என்னைக்கொன்று போட தேவனுக்கு அதிகாரமுண்டு. இங்குள்ள உங்களில் அநேகரும், ஜெபர்ஸன்வில்லில் உள்ளவர்களும்; ஜெபர்ஸன்வில் கூடாரம் "ஆமென்" என்று இப்பொழுது ரீங்காரம் செய்வதை என்னால் கேட்முடிகிறது. ஏனெனில் அவர்கள் அங்கு உட்கார்ந்து கொண்டு இதைக்கேட்டுக் கொண்டிருக்கின்றனர். இது உண்மை! அது என்ன? தேவன் தமது இராஜாதிபத்திய கிருபையினால் அருளும் போது, அது நிறைவேறுகிறது. அதற்கு புறம்பே அது நிறைவேறுவதில்லை.

★★★★★



சகோதரி. ஹாட்டி ரைட்



சகோதரி. ஹாட்டி ரைட்டின் சகோதரி ஈடித்



சகோதரி.ஹாட்டி ரைட்டின் இரண்டு மகன்களும் ஞானஸ்நானம் பெறுதல்

# நான் அதனுடன் பேசினபோது, அது ஜீவனைப் பெற்று, மற்ற மீனைப் போன்றே நீந்திச் சென்றது



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 63-0317M – தேவன் எளிமையில் மறைந்திருந்து அதன்பின் அவ்விதமே தம்மை வெளிப்படுத்துதல்

331 ஒரு முறை நானும் லயல் உட்டும், பாங்ஸூம் (Banks) படகில் உட்கார்ந்து கொண்டிருக்கும்போது தேவனுடைய ரூபகாரப்படுத்தப்பட்ட சத்தியத்தை அறிந்தோம். அங்கு ஒரு சிறிய மீன் செத்துப்போய் தண்ணீரில் கிடந்தது. தேவன் தமது மகிமையை எங்களுக்குக் காண்பிக்கப் போவதாகவும், இவ்விதமாய் சம்பவிக்கப் போவதாகவும் பரிசுத்த ஆவியானவர் அதற்கு முந்தின நாள் எனக்கு அறிவித்தார். அந்தக் காலை அங்கு நின்று கொண்டிருந்தபோது, பரிசுத்த ஆவியானவர் படகுக்குள் வந்தார். நான் எழுந்து நின்று, அந்த

மீனுடன் பேசினேன். அந்த மீன் அப்பொழுது மரித்துப்போய், அரைமணி நேரமாய்த் தண்ணீரில் கிடந்தது. அதனுடைய சுவாச உறுப்புகளும், குடல்களும் வாயின் வழியாக வெளியே வந்து விட்டிருந்தன. நான் அதனுடன் பேசினபோது, அது ஜீவனைப் பெற்று, மற்ற மீனைப் போன்றே நீந்திச் சென்றது. அது என்ன? தேவன் தம்மை எளிமையில் மறைத்துக் கொள்ளுதல்.

332 தேவன் இந்தக் கல்லுகளினாலே ஆபிரகாமுக்கு பிள்ளைகளை உண்டு பண்ண வல்லவராயிருக்கிறார். அவர் ஆப்ஸம் என்ற மிருகத்தையோ, மீனையோ அல்லது வேறெதையுமோ சுகப்படுத்த முடியும். தேவன் கொண்டு வரும் தம்முடைய செய்தியை ஜனங்கள் விசுவாசிக்காவிடில், அதை விசுவாசிக்க

ஒரு ஆப்ஸம் என்ற மிருகத்தை அவரால் உயிரோடெழுப்ப முடியும். அல்லேலூயா! மரித்துப்போன ஒரு மீனை அவரால் உயிரோடெழுப்ப முடியும். மரித்துப்போன ஆப்ஸம் என்ற ஒரு மிருகத்தை அவரால் உயிரோடெழுப்ப முடியும். அவரால் முடியும். அவர் செய்ய விரும்புகிற எந்தக் காரியத்தையும் அவரால் செய்ய முடியும்.

333 இந்த சந்ததிக்கு என்னே ஒரு கடிந்துகொள்ளுதல்! அவர்கள் செய்தியைக் கேட்டு இடறி, அதைக் குறித்து பகட்டாரவாரம் செய்து, "நீ *இதை* செய்யவில்லை, *அதை* செய்யவில்லை" என்று குறை கூறிக்கொண்டிருக்கிறார். ஆனால் தேவன் சுகம்பெற ஒரு சாதரண மிருகத்தை அனுப்புகிறார். பாருங்கள்? என்ன ஒரு கடிந்து கொள்ளுதல்! அது என்னவாயிருந்தது? தேவன் எளிமையில்

வெளிப்பட்டு, பாருங்கள், அவரை மகத்துவமுள்ளவராகக் காண்பித்தலே. ஓ, என்னே, இந்த சந்ததியில் உள்ள இந்த மனிதர்களை அவர்களுடைய அவிசுவாசத்தினிமித்தம் கடிந்து கொள்கிறார்.

## 63-0317M - தேவன் எளிமையில் மறைந்திருந்து அதன்பின் அவ்விதமே தம்மை வெளிப்படுத்துதல்

Rev. William Marrion Branham



# மூன்றாம் இழுப்பு

3



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்திகளிலிருந்து